# சண்முகநாதம்

## உயர்திரு சிற்றம்பலம் சண்முகநாதன்
## அவர்களது
## மணிவிழாச் சிறப்பு மலர் -2019



வெளியீடு

**மணிவிழாக் குழு**

**மல்லாவி, துணுக்காய்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்முகநாதம்

தேசமானி லயன்

உயர்திரு சிற்றம்பலம் சண்முகநாதன்

அவர்களது

## மணிவிழாச் சிறப்பு மலர்

## 06.01.2019

வெளியீடு

மணிவிழாக் குழு

(மல்லாவி, துணுக்காய் பிரதேசம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுழை வாயில் . . .

வந்தோரை வாழ வைக்கும் வளம் கொண்ட இந்த மண்ணை இங்கு வாழ் சமூகம் பாரம்பரியமாக தெய்வமென மதித்து வணங்கும் பண்பாட்டைக் கொண்டுள்ளது. இந்த மண்ணிலே சமூகத்துக்காகத் தன்னை அர்ப்பணித்துச் சேவையாற்றிய கிராம உத்தியோகத்தர்கள் வரிசையில் திருவாளர் சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்கள் முதன்மை நிலையில் உள்ளார். அவரது வாழ்வும் சமூக சேவைப் பணியும் எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு உந்து சக்தியைக் கொடுத்தன. கிராம உத்தியோகத்தர்களிடையே மிகவும் முன்மாதிரியானவராகச் செயலாற்றிக் காட்டியுள்ளார். ஒரு சமூக சேவையாளராக, கிராம உத்தியோகத்தராக, ஒரு கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தராகப் பணியாற்றிய சேவையின் திறனைக் கொண்டு எவ்வாறு சேவையாற்ற வேண்டுமென்பதை எடுத்துக்காட்டியுள்ளார். என்ற வகையில்

**"சண்முகநாதம்"**

என்ற மலரை நாம் அனைவரும் உருவாக்கி அவரது சேவைக்கான "மகுடமாக" இம் மலரை திருவாளர் சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களுக்கு காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

கடந்துபோன முப்பதைந்து வருட காலத்தில் எமது சமூக முன்னேற்றம் பாதிக்கப்பட்ட இக்காலகட்டத்தில் தனக்காக வசதி வாய்ப்புகளைத் தேடி வெளிநாட்டிற்கு செல்லாது எமது மண்ணிலேயே பல்வேறு இன்னல்களை அனுபவித்து மக்களோடு மக்களாக வாழ்ந்து தம் வாழ்நாள் முழுவதையும் இரவு பகல் பாராது அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தரான இவரது வாழ்வு அர்த்தமுள்ளது, சாதனை நிறைந்தது, அர்ப்பணிப்புக் கொண்டது, என்பதனை இம்மலரின் உள்ளடக்கம் சான்று பகிர்கின்றது. காலம் பொருளாதாரம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு அனைவருடைய ஆக்கங்களையும் இம் மலரில் இணைக்க முடியாததையிட்டு மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, இம் மலரினைச் சிறப்புற அச்சிட்டுத் தந்த அச்சகத்தினருக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மணிவிழா அமைப்பினர்.
மல்லாவி - துணுக்காய்ப் பிரதேசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா மலர் குழு

- திரு செல்வரத்தினம் சண்முகரத்தினம் - காரையம்பதி சோதிடமணி, சற்பிரசங்க சைவமணி
- திருமதி புவனேஸ்வரி சிவபாலன் - ஓய்வுநிலை விவசாய போதனாசிரியர்
- திருமதி புவனேஸ்வரி நடராசா - ஓய்வுநிலை அதிபர்.
- திரு தம்பிப்பிள்ளை யோகானந்தராசா - அதிபர் மாங்குளம் மகா வித்தியாலயம்
- திரு த.சிவகுமாரன் உதவி தவிசாளர் துணுக்காய் பிரதேச சபை
- திரு கு.மதிபாலன்- துணுக்காய் வலயக் கல்விப் பணிமனை
- திரு த.செல்வரத்தினம் - ஆசிரியர் மு/கல்விளான் மகா வித்தியாலயம்
- செல்வி ஆ.புஸ்பகலா - கணினிக்கல்வி நிலையம், மு/யோகபுரம் ம.வி

---

## விழாக்குழு

தலைவர் : துரைராசா யேசுதானந்தர் - அதிபர்
மு/மல்லாவி மத்தியகல்லூரி (தேசிய பாடசாலை)

இணணத்தலைவர் : ஆறுமுகம் சுந்தரமூர்த்தி - உதவிக்கல்விப்பணிப்பாளர்
துணுக்காய்

செயலாளர் : புவனேஸ்வரி சிவபாலன் - ஓய்வுநிலை விவசாய போதனாசிரியர்,
பிரதேசபை உறுப்பினர்

இணைச் செயலாலர் : விஜயலக்சுமி ஜெகதீஸ்வரன் - வர்த்தக சங்கம்

பொருளாளர் : வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் - செயலாளர், வர்த்தக சங்கம்

உறுப்பினர்கள் :திரு. க.காந்தரூபன் - யோகபுரம் சிவன் ஆலயம்
திரு. மு.மகேஸ்வரன் - அரசடி விநாயகர் ஆலயம் கல்விளான்
திரு. கை.மோகனதாசன் - தலைவர், கமக்கார அமைப்பு
அனிஞ்சியன்குளம்
திரு. சி.ஜெயக்குமார் - மல்லாவி ஆதிசிவன் பரிபாலன சபை
திரு. சி.இராசகுலசிங்கம் - தமிழ்த்தாய் கலாமன்றம்
அணிஞ்சியன்களம்
திரு. தி.சோதிலிங்கம் - தலைவர், சிவன் ஆலையம் மல்லாவி
திரு ச.மயில்வாசன் - முகாமைத்துவ உதவியாளர்,
கல்வி வலயம் துணுக்காய்.
திரு சு.மனோகரராசா - சனசமூக நிலையம், அனிஞ்சியன்குளம்
திரு கு.கேதீஸ்வரன் - அரசடி விநாயகர் ஆலயம், கல்விளான்.
திரு சி.யோகநாதன் - பாலவிநாயகர் ஆலயம், புகழேந்தி நகர்.
திரு சி.கணபதிப்பிள்ளை - கமக்காரர் அமைப்பு, புகழேந்தி நகர்.
த.ஜெயக்குமார் - ஆட்டோ சங்கம், மல்லாவி.

## ஆலோசகர்கள்

சிவஸ்ரீ குமார பிரபாகரக் குருக்கள்
சிவஸ்ரீ உருத்திர மூர்த்திக் குருக்கள்
திரு த.யோகானந்தராசா - அதிபர், மு/மாங்குளம் ம.வி
திரு பு.கேதீஸ்வரன் - அதிபர், மு/தேறங்கண்டல் அ.த.க பாடசாலை
திரு பு.நடராசா - ஓய்வுநிலை அதிபர், பாரதிநகர்.
திரு த.அருமைநாயகம் - ஓய்வுநிலை அதிபர், அனுஞ்சியன்குளம்
த.சிவகுமாரன் - பிரதி தவிசாளர், பிரதேசசபை, துணுக்காய்.
செ.அரவிந்தன் - பொதுச் சுகாதார பரிசோதகர், மல்லாவி
தேசமானிய லயன் சி.ஜெயசங்கர் - தலைவர்,
பொது முகாமைத்துவ உதவியாளர் சங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 இல் இருந்து 60 வரை...

அணிஞ்சியன் குளம் என்னும் அன்னையின் மடியிலே 1959ம் ஆண்டு ஜனவரி மாதம் மூன்றாம் திகதி அவதரித்த "சண்முகநாதன்", சிற்றம்பலம் - வள்ளியம்மை தம்பதியினரது கனிஸ்ட புதல்வனாவார். சிறு வயதிலேயே மதிநுட்பம் கொண்டவராகவும், சுறு சுறுப்பானவராகவும் தன் உறவுகளுடன் அன்பு கொண்டவராகவும் காணப்பட்டார்.

இவர் ஆரம்பக் கல்வியை அணிஞ்சியன் குளம் வித்தியாலயத்திலும் உயர் கல்வியை யோகபுரம் மகா வித்தியாலயத்திலும் கற்றார். கல்வி கற்கும் காலத்தில் விளையாட்டு, கலை போன்றவற்றில் மிகுந்த ஆர்வம் கொண்டவராகவும் திகழ்ந்தார். இதனால் மாணவர் மன்ற நிகழ்ச்சிகளில் தலைமை வகிப்பது மட்டுமன்றி பல நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதில் திறமை கொண்டிருந்தார். இவர் பாடசாலைக் காலத்தில் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும், மதிக்கப்பட்டு, சிறந்த மாணவனாகத் திகழ்ந்தார். இவர் இளமைக் காலத்திலிருந்தே சேவை செய்யும் எண்ணம் கொண்டவர். நலிந்தவர் களுக்கு உதவும் உள்ளம் கொண்டவர். படித்து முடித்து வேலைக்காக காத்திருந்த காலத்தில் தந்தைக்கு உதவியாக விவசாயத்தில் ஈடுபட்டிருந்தார். தாயாருக்கு உதவியாக சில வேலைகளைச் செய்து கொடுப்பார். ஆலய தரிசனம் செய்வது இவரது கடமைகளில் ஒன்றாக இருந்தது. இதன் பயனாக கோயிலில் பூசகருக்கு உதவியாக நிற்பதுஇ ஆலய வளாகத்தைத் துப்பரவு செய்வது பூஞ்செடி நாட்டுவது, பராமரிப்பது போன்ற வேலைகளைச் செய்வதுடன் தன் வயதினரையும் இணைத்துக் கொள்ளும் வல்லமை உள்ளவர்.

இவர் இளைஞனாக இருக்கும் காலத்தில் "இளம் விவசாயிகள் கழகத்தில்" அங்கத்தவராக இணைந்து பல பொது வேலைகளைச் செய்து நிறை வேற்றியுள்ளார். "இலங்கை வானொலி விவசாய அறிவுப் போட்டி" யில் பங்கு பற்றி "ஜாக்பொட்" பரிசினைப் பெற்று இளம் விவசாயிகள் கழகத்திற்கும், இந்த பிரதேசத்திற்குமே பெருமை சேர்த்துள்ளார்.

1983ம் ஆண்டு விசேட சேவை உத்தியோகத்தர் பதவி கிடைத்தது. இக் காலத்தில் இருந்து இவரது பதவி நிலைச் சேவையுடன் பொதுச் சேவை வரலாறும் ஆரம்பமாகியது. மக்களால் போற்றிப் புகழப்பட்டார். வியந்து பாராட்டப்பட்டார். தங்கள் உறவென மதிக்கப்பட்டார்.

1987ம் ஆண்டு இவரது பதவியில் இருந்து கிராம அலுவலர் பதவிக்கு மாற்றப்பட்டார். கிராம உத்தியோகத்தர் பதவியிலிருக்கும் போது துணுக்காய் பிரதேசத்தில் உள்ள பதினெட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் திறம்பட கடமை புரிந்துள்ளார். இவர் மாற்றலாகிப் செல்லும் போது மீண்டும் வரவேண்டும் சேவைக்காக என்று கூறியே வழியனுப்பி வைப்பார்கள் அக்கிராம மக்கள். அந்த அளவிற்கு அன்புடன், பண்புடன் வழிகாட்டியாகவும் இருந்து சேவையாற்றியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளின் இல்லங்களிலோ, நண்பர்களின் இல்லங்களிலோ, பொதுமக்களின் வீடுகளிலோ ஏதாவது நிகழ்வு நடந்தால், அந்த நிகழ்வில் முன்னின்று நடாத்தும் தன்மையினைக் கொண்டுள்ளவர். நிகழ்வின் வீட்டுக் காரருக்கு இவரது உதவி பேருதவியாகவே இருக்கும்.

விழாக்கள், கோயிற் பூசை நிகழ்வுகளில் சிறந்த அறிவிப்பாளராகவும், நேரடி வர்ணனையாளராகவும் இருந்து சிறப்புறச் செய்யும் ஆற்றல் உள்ளவர். இவரது இந்த அறிவிப்பாளர் சேவை இன்றும் திறமையுடன் நடைபெறுவதை நாம் அனைவரும் காணக்கூடியதாக உள்ளது.

இவரது சமூகப் பணிகாரணமாக சமூகத்தில் பல்வேறு அமைப்புக்களில் இருந்து சிறப்பான இவரது சேவைக்காக அழைப்பது வழக்கமாகிவிட்டதனால் அமைப்புக்களில் தலைவர், செயலாளர், பொருளாளர்,போசகர், ஆலோசகர் என ஏதோ ஒரு பதவி வகிப்பதன்மூலம் அமைப்பு சுறு,சுறுப்பாக இயங்க ஏதுவாகும்.

**அந்த வகையில் இவர் அங்கம் வகிக்கும் நிர்வாக, அமைப்புகளும் இவைகளின் பயனாகப் பெற்றுக் கொண்ட விருதுகளும்**

1. தேசமானி விருது - இலங்கை மனித உரிமை அமைப்பு 2017
2. தேசகீர்த்தி விருது - இலங்கை மனித உரிமை அமைப்பு 2018
3. சிவனருட்செல்வன் - உலக சைவத்திருச்சபை - இலங்கை 2017
4. லங்காகீர்த்தி விஸ்வம் பல்கலைக்கழகம் - மட்டக்களப்பு 2018
5. சமாதான நீதவான 2016

**அங்கம் வகிக்கும் சமூக அமைப்புகள்**

1. விநாயகர் சனசமூக நிலையம் - அனிஞ்சியன்குளம்
2. முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் - இலங்கை சமாதான நீதிவான் சங்கம்.
3. துணுக்காய் கலாசார பேரவை உறுப்பினர்.
4. துணுக்காய் பிரதேசம் கிராம அபிவிருத்திச் சங்கம் / மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்.
5. துணுக்காய் பிரதேச இந்துமகாசபை உபதலைவர்.
6. வரணி லயன்கழக உபதலைவர்.
7. துணுக்காய் ப. நோ. கூ. சங்கம் அனிஞ்சியன்குளம் கிளைக் குழுத் தலைவர்.
8. கமக்கார அமைப்பு உறுப்பினர் அனிஞ்சியன்குளம்
9. தலைவர் சற்சங்கம் வடமாகாணம்.
10. செயலாளர் ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம் அனிஞ்சியன்குளம்.
11. தவைலர் பத்திரகாளியம்மன் ஆலயம் பாரதிநகர்.
12. செயலாளர் யோகாம்பிகை சமேத யோகபுர நாதர் ஆலயம்.
13. தலைவர் ஸ்ரீஅதிசய முருகன் ஆலயம் தேறாங்கண்டல்.
14. தலைவர் நரசிங்க வைரவர் பரிபாலன சபை.
15. உறுப்பினர் ஸ்ரீபால சுப்பிரமணியர் ஆலயம் மல்லாவி.
16. உறுப்பினர் வைத்தியசாலை அபிவிருத்திசபை மல்லாவி.
17. போசகர் கிராம அபிவிருத்திச்சங்கம் அனிஞ்சியன்குளம்.
18. உபதலைவர் - ஐக்கிய கிராம அலுவலர் சங்கம் முல்லைத்தீவு மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறப்பித்துக் கூறக்கூடிய செயற்பாடுகள்**

1. கந்தபுராணம், திருவெம்பாவை ஓதுதல், சமய விழாக்கள் நேர்முகவர்ணனை செய்தல்.
2. கோவில்களில் கூட்டுப் பிராத்தனை செய்தல்.
3. இடம்பெயர்ந்த மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.
4. அனாதைப் பிணங்களை அடக்கம் செய்வதற்கு உதவிபுரிதல்
5. மரணச் சடங்குகள் செய்வதற்காக ஏற்பாடு செய்து கொடுத்தல்.
6. சமய, சமூக பொது விழாக்களை தலைமை தாங்கி நடாத்துதல்.
7. அறிவிப்பாளராக இருந்து நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குதல்.

போன்ற நடவடிக்கைகளை முன்னெடுத்து சமூகத்தை நல்லநிலைக்குக் கொண்டு வருவதற்காக உழைத்தவர். பல சிரமதானப் பணிகளை முன்னெடுத்து, முன்னின்று செய்துள்ளார். கோயிற் புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்து மக்களை அணிதிரட்டி அவற்றைப் பூர்த்தி செய்துள்ளார். சேவை, மூப்புத் திறமை, அடிப்படையில் இலங்கையில் உள்ள கிராம அலுவலர்களுள் 25 கிராம அலுவலர்கள் தெரிவு செய்யப்பட்டு, உள்நாட்டு அலுவல்களமைச்சினால் 2017ம் ஆண்டின் சிறந்த கிராம சேவை உத்தியோகத்தர் என கௌரவித்து இந்தியாவிற்கு கல்விச் சுற்றுலாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அந்தச் சுற் றுலாவில் இவரும் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்ததில் இருந்து இவரது சேவையையும், அர்ப்பணிப்பையும் கூறமுடிகின்றது. இவரது வினைத்திறனான சேவையினால் சமூகம் குறித்துக் கூறுமளவிற்குப் பயனடைந்துள்ளது.

விழாக்குழுச் செயலாளர்.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா நாயகனின் பெற்றோர்



தோற்றம் 09.07.1913 அமரர் மறைவு 21.04.2005
**சிற்றம்பலம்.வள்ளியம்மை**

தோற்றம் 20.06.1908 அமரர் மறைவு 30.11.198
**சரவணமுத்து.சிற்றம்பலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...

### ஆசிச் செய்திகள்

- சிவஸ்ரீ சிவன் குமார பிரபாகர சிவாச்சாரியார்
- Reved.fr.A.Skaranraj
- சிவஸ்ரீ சி. உருத்திரமூர்த்திக் குருக்கள்
- சிவஸ்ரீ தி. ஞானப்பிரகாசக் குருக்கள்
- சிவஸ்ரீ முருகானந்தக் குருக்கள்
- சிவஸ்ரீ செ.விமலராஜக் குருக்கள்
- கு.சுமுகலிங்க சிவாச்சாரியார்
- பிரமச்சாரி ஜாக்கிரத தைதன்யா சுவாமிகள்
- விஸ்வப்பிரம்மஸ்ரீ க.கோவிந்தராஜா

### வாழ்த்துச் செய்திகள்

- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா
- கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் Dr சி.சிவமோகன்
- முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன்
- மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு சி.ஏ.மோகன்றாஸ்
- மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு சி.குணபாலன்
- துணுக்காய் பிரதேச செயலர் திரு கு.பிரபாகரமூர்த்தி
- கரைதுறைப்பற்று பிரதேச செயலர் திரு இ.பிரதாபன்
- திரு அ.அமிர்தலிங்கம்
- திருமதி ப.தியாகராசா

### ஏனைய வாழ்த்துக்களும் கட்டுரைகளும்

- வாழ்த்து - திரு சண்முகம் சிவஞானம்
- திரு செல்வ சண்முகரத்தினம்
- வைத்திய கலாநிதி சுசீந்திரன்
- வைத்திய கலாநிதி சிவகுலேந்திரா
- திரு கு.சிதம்பரநாதன் - ஓய்வுநிலை பீடாதிபதி
- திரு ஆ.சுந்தரமூர்த்தி - வலயக் கல்விப் பணிப்பாளர்.
- திரு து.யேசுதானந்தர் - அதிபர்
- திரு சி.பிரபாகரன் - கமநல சேவைத் திணைக்களம்
- திரு சி.நாகேந்திரராசா - அதிபர்
- திரு கு.ஜெகதீஸ்வரன் - அதிபர்
- திரு ஆர்.நிக்ஷன் - அதிபர்
- திருமதி ந.புவனேஸ்வரி - ஓய்வு நிலை அதிபர்
- லயன் ஜெயசங்கர்
- திருமதி சி.புவனேஸ்வரி - ஓய்வுநிலை விவசாய போதனாசிரியர்
- திரு த.அருமைநாயகம் - ஓய்வுநிலை அதிபர்
- கிராம அலுவலர்கள் - பிரதேச செயலகம், துணுக்காய்.
- திரு தி.சோதிலிங்கம்
- திரு கு.கேதீஸ்வரன் - கல்விளான்
- திரு வெ.விஜயகுமார் - வர்த்தகர் சங்கம்
- திருமதி ஜெ.விஜயலக்சுமி - வர்த்தகர் சங்கம்.
- திரு சு.மனோகரராசா - சனசமூக நிலையம்
- திரு பு.கேதீஸ்வரன் - அதிபர்
- திரு த.யோகானந்தராசா - அதிபர்
- கவிதை - கவிமணி ச.கிரிஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மணிவிழா நாயகன்"

## திருவளர் சண்முகநாதன் ஐயா அவர்களுக்கு வாழ்த்துரை...

---

### சமர்ப்பணம்

அணிஞ்சியன்குளம் யோகபுரத்தைச் சேர்ந்த திருவாளர் சிற்றம்பலம் சண்முகநாதன் ஐயா பற்றி நான் கூறுவது என்றால் நேரம், காலம் போதாது. சிற்றப்பலம் ஐயா அவரது மனைவியும் ஈன்றெடுத்து வளர்த்து முருகப் பெருமானுடைய பெயரைச் சூட்டினர். உலக மக்களுக்கு நற்பண்புகள் சமய உணர்வுகள் நல்வழிகாட்டிகள் மக்களுடைய துன்பங்கள் கருதி உதவிகள் ஆறுதல்கள் எல்லாத் தன்மைகளையும் ஊக்குவிப்பதற்காக இந்த பூமியில் அவதரித்தவர் தான் திருவாளர் சண்முகநாதன் ஐயா.

01.07.1983ம் ஆண்டில் தனது அரசசேவையில் இணைந்த இவர் 01.06.1987 தொடக்கம் கிராம அலுவலராக துணுக்காய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றினார். அவருடைய அருமையான சிறுபெயர் மல்லாவி S.S சண் உண்மையில் அவருடைய குணம் மிகவும் மெதுமை பொறுமையானது எந்தவொரு கோபம் உள்ளவரிடமும் மென்மையான மனம் உடையவருடனும் அவர்களுடைய மனதை அறிந்து அவர்களுக்குத் தக்கவாறு கதைத்துப் பேசி மென்மையான முறையில் செல்லக்கூடியவர். வன்னி நாட்டின் அசாதாரண நாட்டுக்குழப்பம் ஏற்பட்டு மக்கள் இடம் பெயர்ந்து சென்று கொண்டிருக்கிற பொழுது மக்களுக்கான உதவிகள் நிவாரண உதவிகள் மக்களைக் காப்பாற்றும் முயற்சிகளில் முன்னின்று செய்தவர். எந்தநேரத்திலும் மக்கள் கேட்கும் உதவிகளுக்கு முடியாது என்று சொல்லாமல் நல்ல மனதோடு உதவிகள் வழங்குபவர் அவரிடம் எந்த உதவிகேட்டாலும் மாட்டேன் என்று சொல்லாமல் ஓம் செய்வோம் கூடிய விரைவில் என்று சொல்லி மக்களைத் திருப்திப்படுத்துபவர்.

எங்களுடைய இந்து மதம் அழிந்து போகக்கூடாது மக்கள் எல்லாம் இந்து மதத்தில் பற்று உள்ளவர்களாக இந்து மதங்காட்டும் முறைகள் வழிபாடுகள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவராக கோயில்கள் பொது வைபவங்கள் என்பவற்றில் நடைபெறும் நிகழ்வுகளில் சிறந்த வழிகாட்டியாக இருந்து எல்லோரையும் நெறிப்படுத்தி அதை நடைமுறைப்படுத்துபவர். அவர் சிறந்த நேர்முக வர்ணனையாளர், சிறந்த பண்ணிசையாளர், தேவாரம், பஜனை, கந்தபுராணம், திருவெம்பாவை ஓதுதல் போன்றவற்றில் சிறந்தவர். ஒரு சிறந்த அறிவிப்பாளர். எத்தனையோ ஏழை மக்களுக்குப் பணிபுரிந்தவர். அநாதைப் பிணங்களை அடக்கம் செய்வற்கு ஆலோசனை வழங்கி வழி காட்டியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல சமூக நிறுவனங்களிலே தலைவராக, பொருளாளராக, செயலாளராக, ஆலோசகராக, இணைப்பாளராக, போசகராக கடைமையாற்றுகின்றார். பல சங்கங்களின் சிறந்தவொரு தலைவராக இருக்கின்றார். தேசமானிய விருது, இலங்கை மனித உரிமை அமைப்பு 2017ம் ஆண்டு, தேசகீர்த்தி விருது இலங்கை மனித உரிமை அமைப்பு 2018ம் ஆண்டு, சிவனருட்செல்வர் உலக சைவ திருச்சபை இலங்கை 2017ம் ஆண்டு, லங்கா கீர்த்தி விஸ்வம் பல்கலைக் கழகம் மட்டக்களப்பு 2018ல், சமாதான நீதிவான் 2016ம் ஆண்டு, அறநெறி சான்றோன் உலக சைவ திருச்சபை 2018ல் இவ்வளவும் அவர் பெற்ற சிறப்பு விருதுகளும் பட்டங்களும் ஜோதிடத்துறையிலும் சிறந்த ஒரு பண்புடைய மனிதனாகத் திருவாளர் சண்முகநாதன் ஐயா அவர்கள் தனது 60ஆவது வயதில் மணிவிழாவைக் காணுகின்றார். அவர் மென்மேலும் ஐஸ்வர்யம் ஆயுள் மங்களம் சௌபாக்கியத்துடன் திகழ இறைவனைப் பிரார்த்தித்து இவ் வாழ்த்துரையைச் சமர்ப்பணம் ஆக்குகிறேன்.

வாழ்க வளமுடன்...
லோகா சமஸ்தா சுகினோ பவத்து
மங்களம் பவத்து
(சுபம்)

பிரதிஷ்ட்டா பூஷணம் சிவகாம கலாநிதி
சொற்பொழிவு வேந்தன்
ஜோதிட சாகரம்
சிவன் குமார பிரபாகர சிவாச்சார்யார்
அட்சயா ஜோதிட நிலைய அதிபர்
572 வள நகர், மல்லாவி

---

**பாகப்பிரிவினை மற்றும் சொத்துத் தகராறு சுமூகமாகத் தீர :**

சொத்துத் தகராறு நிலப்பிரச்சனை மற்றும் பாகப் பிரிவினையில் சரியான பங்கைப் பெற முடியாதோர் கீழ்க்கண்ட மந்திரத்தை ஜெபம் செய்தால் நல்ல பயன் கிட்டும். தினமும் 33 அல்லது 54 அல்லது 108 முறை செய்து வரவேண்டும்.

சாந்தா த்யௌ: சாந்தா ப்ருதிவி
சாந்தமிது முர்வந்தரிட்சம்!
சாந்தா உதன் வதீராப:
சாந்தா ந:ஸநீத் வேஷதீ!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனுக்கு முத்தான வாழ்த்துக்கள்...

வரலாற்றில் பலர் தோன்றுகின்றனர் ஆனால் சிலரே வரலாற்றில் இடம் பிடிக்கின்றனர் அந்தவகையில் மக்கள் பணியில் மணிவிழா காணும் நிர்வாக கிராம அலுவலர் திரு சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களின் சேவை, வரலாற்றில் பல இதயங்களில் இடம் பிடித்திருக்கிறது என்றால் மிகையாகாது தன்னலமில்லா பணியாளனுக்கு அறிமுகம் தேவையில்லை திரு சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களை நீண்ட நாட்களாக தெரியாமல் விட்டாலும் கடந்த சில மாதங்களாக பொது நிகழ்வுகளில் கண்ட அறிமுகம் பார்ப்பதற்கு மிகவும் எளிமையான தோற்றம் அமைதியான பேச்சு பணிவான நடத்தை இவை யெல்லாம் இவரின் அணிகலன்கள் இவையெல்லாம் இவரது பிறப்புக்கு பலம் சேர்கின்றதாக இருக்கின்றன பொதுப் பணியோடு சமய தொண்டிலும் ஈடுபட்டு திருப்தி கண்ட ஒருவராக இருக்கிறார். அவரது பணிக்கு கிடைத்த வெற்றியே இவர் பெற்ற விருதுகளும் பட்டங்களும் இப்படிப்பட்ட மகத்தான பணியாளனை வாழ்த்துகின்றேன் இவர் பணி சிறக்கவும் தொடர்ந்து மக்கள் பணியில் தன்னைக் கரைக்கவும் இறைவன் ஆசிர்வதிக்க வேண்டுகின்றேன்

Reved.fr.A.Skaranraj
Paris priest
St.sebastian's church
Mallavi, srilanka

---


**தேர்வில் வெற்றி பெற:**

நீலநிற அட்டை அல்லது நீல நிறத் துணியை இரவு படுக்கும் முன் படுக்கைக்கு முன் இருக்கும் சுவரில் ஒட்டி அதைப் பத்து நிமிடம் உற்றுநோக்கித் தியானம் செய்தால் தேர்வில் அதிக மதிப்பெண் பெறலாம் இளம் மாணவர்கள் சுமார் ஐந்து நிமிடம் செய்தால் போதுமானது.

---

**அலுவலகம் மற்றும் வியாபார ஸ்தலத்தில் அமரும் முறை:**

வடக்கு அல்லது கிழக்கு நோக்கி அமரலாம். பெரும்பாலும் தென்மேற்கு பகுதியில் அமர்வது நல்லது. அமரும் நாற்காலிக்குப் பின்புறம் ஜன்னல் திறந்திருக்கக் கூடாது வலது புறம் இடதுபுறம் திறந்து இருக்கலாம். வக்கீல்கல், ஆடிட்டர்கள், ஜோதிடர்கள் மேற்கு நோக்கி அமர்வது ஒரு வகையில் நல்லது தென்மேற்கு என்ற உடன் தென்மேற்கு மூலைக்குப் போகக்கூடாது. தென்மேற்குப் பகுதியாக இருந்தால் போதுமானது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி ...

மணி விழாக் கொண்டாடும் திரு சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களை ஸ்ரீ பால விநாயகப் பெருமான் துணை கொண்டு நீடூழி வாழ வாழ்த்துகின்றேன். திரு. சி. சண்முகநாதன் அவர்கள் தான் வாழும் காலத்தில் நல் ஒழுக்கத்துடன் வாழ்ந்து சமூகத்திற்குப் பாரிய சேவை ஆற்றியதோடு சமய வளர்ச்சிக்காகவும் ஆலயங்களின் புனருத்தாரணப் பணிகளில் முன்னின்று நடத்திக் கும்பாபிஷேகங் களை நிகழ்த்த உதவியுள்ளார். ஆலயங்களில் கூட்டுப் பிரார்த்தனைகள் செய்தல். பண்ணுடன் திருமுறைகளை ஓதுதல் போன்ற சமயப் பணிகளையும் செய்து கொண்டிருக்கின்றார்.

அத்துடன் 1996ம் ஆண்டு காலப் பகுதியில் நாட்டின் போர்ச் சூழலின் போது துணுக்காய்ப் பிரதேசத்திற்குப் பிற பிரதேசங்களிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து வந்த போது அவர்களுக்கான நிவாரணப் பணிகளுக்கு முன்னின்று உழைத்தார். அத்துடன் பல குடும்பங்களுக்கான அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். இவர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய (அணிஞ்சியங்குளம்) செயலாளரும் ஆவார். பாரதிநகர் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் தலைவராவர். அணிஞ்சியன்குளம் நரசிங்க ஆலய தலைவராகவும் இருந்து ஆலயத்திற்குப் பெரும் தொண்டாற்றியுள்ளார்.

தனது சேவைக்காலத்தில் சமூக, சமய ஆன்மிகப் பணிகளில் தன்னை அர்ப்பணித்த ஓர் ஆசான். காலம் அறிந்து பணியாற்றியவர். இவரது சமூக, சமய பணிக்காக பல பட்டங்களும் விருதுகளும் கிடைத்துள்ளது. இது அவருக்குக் கிடைத்த வெற்றியின் படிக்கற்கள். இவர் அரசபணியில் இருந்து ஓய்வு நிலை அடைந்தாலும் அவரின் சமூக சமயப் பணி தொடர வேண்டுமென வாழ்த்துவதோடு அவர் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

**வாழ்க பல்லாண்டு**

சீர் பெறு அணிஞ்சியன் குளத்தில் உதித்த செம்மல்
செழுங்கலை பண்பு வளர்க்கும் ஏடாம்.
பரணி பைந்தமிழ்ப் பண்பாடும் சிறக்க
பேரெழுச்சியுடன் விளைந்து அமைந்த காரணியாக
வந்து சமயம் சமூகம் காக்கும் சண்முகநாதன்
கவி நூறு கற்பகமாய் ஒளி பரப்பி
ஸ்ரீ பால விநாயகரின் கிருபா கடாட்சம் பெற்று
பூவுலகில் வாழ்க பல்லாண்டு.

சிவஸ்ரீ. சி. உருத்திரமூர்த்தி குருக்கள்.
ஸ்ரீபால விநாயகர் ஆலயம்
புகழேந்திநகர், யோகபுரம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி ...

சிவமயம்

எமது கிராம சேவகர் அவர்களின் மணிவிழா சிறப்புற அமைய "விக்கினம் தீர்க்கும் விக்னேஸ்வரர்" திருவருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன். மல்லாவிப் பிரதேசத்தில் மக்கள் சேவை செய்து, மக்களோடு இணைந்து சமூக சேவை செய்து, மக்களையும் உயர் நிலைக்கு மாற்றியமைத்து (குறிப்பாக தேறாங்கண்டல் மக்கள்) மல்லாவி மண்ணுக்கும் பெருமை சேர்த்த விதானையார் சண்முகநாதன் அவர்களது மணிவிழா மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். யோகாம்பிகை உடனுறை யோகபுரநாதர் சிவாலயத்தில் அறங்காவலர் சபையில் செயலாளராக ஆன்மீக அறப்பணியாற்றும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. இவர் பெற்றோர் செய்த தவப்பயனே ஆகும் "மண்ணில் பிறந்தார் பெறும்பயன் மதி சூடும் அண்ணலார் நல் விழா பொலிவு கண்டார்"" என்ற தோத்திரப் பாடலை அடியொற்றி தன் சேவையை மன மகிழ்வோடு ஆற்றுவதற்கு இவரின் மனையாளின் துணையே காரணமாகும்.

இவரது ஓய்வு காலம் அன்பேசிவம் சிவமே அன்பு என்ற உணர்வை உலகறியச்செய்யும் காலமாக அமைய யோகபுரநாதர் திருவருள் புரிய பிரார்த்திப்பதுடன், இவரது குடும்பமும், மக்களும், அறப்பணி, அரும் பணி, சிவப்பணி, திருப்பணி, எம்பணி, சமூகப்பணி என்ற உணர்வு பெற்று உயர்வடைவார்களாக "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்""அறவாழி அந்தணன் தாழ் சேர்ந்தார்க்கு அல்லால் பிறவாழி நீத்தல் அரிது" இக்குறள் அடியைப் பின்பற்றி கிராம சேவகர் அவர்கள் பணி சிறக்க ஆசி கூறுகின்றேன்.

**பிரதம குருக்கள்**
**சிவஸ்ரீ திருஞானசம்பந்த குருக்கள் ஞானப்பிரகாசக் குருக்கள்.**
**யோகபுரம் யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் தேவஸ்தானம்**
**மல்லாவி-அணிஞ்சியன்குளம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி ...

நீண்ட காலமாக இந்தப் பிரதேசத்தில் உயர்வான சேவையினை வழங்கி நிற்கும் திருவாளர் சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களின் மணிவிழாவிற்காக ஸ்ரீ பாலசுப்ரமணியரின் அருள் வேண்டி நல்லாசி வழங்குவதில் சந்தோசம் அடைகின்றேன்.

திரு சிற்றம்பலம் சண்முகநாதன் கிராமஅலுவலர் அவர்கள் எமது ஆலயத்தின் பல வகிபாகங்களுடன் தொண்டாற்றி, சேவை செய்து வருகின்றார். அத்துடன் எமது ஆலயத்தின் ஆயுட்கால உதவியாளராகவும் இருந்து வருகிறார். அதுமட்டுமன்றி பூசை, விழாக்கள் நடக்கும் காலத்தில் எந்த விடயத்தையும் முன்னின்று முடிக்கும் எண்ணம் கொண்ட இவரின் செயற்றிறன் எமது சமூக வளர்ச்சிக்கு என்றுமே வேண்டி நிற்கின்றது. இவரது பணிகள் என்றும் சிறப்புறத் தொடரவேண்டுமென எல்லாம் வல்ல ஸ்ரீ பாலசுப்ரமணிய பெருமானின் நல்லாசிகளை வேண்டுகின்றேன். இவர் இவ்வாலயத்தில் பரம்பரையாக திருவெம்பா பூசையினைத் தொடர்ச்சியாகச் செய்து வரும் பக்தனாக இருந்து வருகின்றார். இவர் ஓய்வுகாலத்தில் நீண்ட ஆயுளுடன் வாழ மணிவிழா நாளில் வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

சிவஸ்ரீ முருகானந்த குருக்கள்
ஸ்ரீபாலசுப்ரமணிய தேவஸ்தானம்,
மல்லாவி.

---

**மாணவ மாணவிகள் படிப்பில் தேர்ச்சி பெற நல்ல முன்னேற்றம் அடைய:**

குழந்தைகள் தங்கள் வாழ்வில் பல விதங்களில் முன்னேற்றம் அடைய அவர்களுடைய பிறந்த திதி அன்று மூன்று விதமான கனிகளை அதாவது பழங்களை வைத்து அர்ச்சனை செய்து வழிபட வேண்டும். அவ்வாறு அர்ச்சனை செய்து வழிபடுவதற்கு முன்பு ஏழை எளியோருக்கு இயன்ற உணவு கொடுப்பது நல்லது. வளர்பிறை திதியில் பிறந்தவர்கள் வளர்பிறை திதியில் தான் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை தேய்பிறையிலும் செய்யலாம். அதே போல் தேய் பிறை திதியில் பிறந்தவர்கள் வளர்பிறை வளர்பிறைத் திதியிலும் செய்யலாம். பெரியவர்களும் இது போல செய்தால் நல்லது. அவர்களுடைய வாழ்க்கையில் மனம், பணம் ரீதியான உயர்வு உண்டாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எனது மனமார்ந்த ஆசி . . .

இலங்கைத்தீவின் வடக்கே முல்லைத்தீவின் யோகபுரம் அணிஞ்சியன் குளம் என்னும் அழகிய கிராமத்திலே சிற்றம்பலம் எனும் நற்பண்பாளனுக்கும் ஊர்மக்களுக்கும் அணையாத் தீபமாய் வந்துதித்தவர் சண்முகநாதன் என்ற நற்பண்பாளன். அவர் தனது கல்வியை சிறப்பாகக் கற்று அதனோடு கூடிய நற்பண்பையும் கற்று மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதற்காக கிராம சேவகர் என்ற அழகிய சேவையில் ஈடுபட்டார். அதனூடாகப் பல சேவைகளை செய்தார். தனது கடமை நேரம் முடிந்தாலும் கூட நேரம்பாராது மக்களுக்குச் சேவை செய்தார். அத்தோடு சமயத்திலே மிகுந்த பற்றுக் கொண்டவர். அதன்பால் சமய வளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டவர். அப்படியான ஒருவர் தனது வேலையில் இருந்து ஓய்வு பெறுவது ஒருபக்கம் மகிழ்ச்சி மறுபக்கம் வேதனை எப்படி மகிழ்ச்சி, வேதனை என்றால், அவர் செய்த கிராம சேவைக்கு முற்றுப் பெறுவது என்பது வேதனை, இப்படியான ஒருவர் ஓய்வு பெறுகின்றார் என்று, அதேவேளை மகிழ்ச்சி எது என்றால், சமய செயற்பாட்டில் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கப் போகிறார் என்பது, எது எவ்வாறு இருப்பினும் அவருடைய வாழ்வு சிறப்புற்று இருக்க வவுனிக்குளம் சீதளாம்பிகை சமேத சிவபுரநாதப் பெருமான் அருள் வேண்டி எனது ஆசியும் உரித்தாகட்டும்.

சுபம்.

சிவஸ்ரீ செ. விமலராஜக்குருக்கள்
சீதாம்பிகை சமேத சிவபுரநாதர் பெருங்கோயில்
சிவபுரம்.

---

**பணப்பெட்டியில் வைக்கும் பொருட்கள்:**

பணப்புழக்கம் அதிகரிக்க, பணவசியம் ஏற்பட பணப்பெட்டியில் சிறிய வெள்ளைத் துணியில் சிறிது ஏலக்காய், சிறிது பச்சைக் கற்பூரம், சிறிது சோம்பு, மூன்றையும் சேர்த்து முடிச்சுகளாகக் கட்டி வைக்கவும். இதனால் பணப்புழக்கம் அதிகரிக்கும். வசியம் ஏற்படும். ஒவ்வொன்றையும் சுமார் மூன்று அல்லது நான்கு எண்ணிக்கையில் வைத்தால் போதுமானது.

**கணவன், மனைவி, மாமியார், மருமகள் விரோதம் விலக:**

சுத்தமான தேங்காய் எண்ணெய் 10-ல் ஒரு பங்கு நல்லெண்ணெய் கலந்து அதனுடன் பொன்னாங்கண்ணி, மருதாணி, கரிசலாங்கண்ணி, ஆகிய தழைகளைச் சேர்த்துக் காய்ச்சி, வடிகட்டி அந்த எண்ணெயை வறுமையால் வாடும் பெண்களுக்குத் தலைக்குத் தடவக் கொடுத்தால் நாளடைவில் குடும்பத்தில் ஒற்றுமை ஓங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை...!

"ஓம் நமசிவாய சிவாயநம ஓம்"
அன்பே சிவம்

பேரன்புக்குரிய திருவாளர் சிற்றம்பலம் சண்முகநாதன் நிருவாகம், கிராம சேவை அலுவலர் அவர்கள் 03.01.2019 ஆம் திகதி மணிவிழாக் காணுவது அறிந்து அகமகிழ்வது ஆதிசிவனருட் கடாட்சமேயாம். கிராம சேவை அலுவலராகப் பணியை ஆரம்பித்து நிருவாக கிராமசேவை அலுவலராக இக்காலம் பணியாற்றி அரசபணியில் இருந்து ஓய்வுபெறுவது அவரது பணிக் காலத்து சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றது. மல்லாவி அணிஞ்சியன்குளம் மேலோங்கும் பழம்பெரும் புண்ணிய பதியாகும். இவரது துணைவியாரும் பூர்வீக பரம்பரை பன்றித்தலச்சி கண்ணகி அம்மன் ஆலய சூழலில் உள்ளது. இவர் புராணபடனம், திருமுறைமுற்றோதல் போன்ற இன்னோரன்ன பணிகள் சிறப்புறும் பிரதேச இவரது முன்னோர்கள் வாழ்ந்த பதியாகும்.

இப்பதியின் சிறப்பினை இவரது சேவையூடாக முல்லைதீவு மாவட்டத்தின் பலபிரதேசங்களில் செயற்படுத்தியுள்ளார்.மல்லாவி, தேறாங்கண்டல், பாரதிநகர், புகழேந்திநகர், திருநகர், யோகபுரம், மாங்குளம், அம்பால்குளம் போன்ற பதிகளில் சைவத்தமிழ்ப் பற்றுடனும் எல்லாச்சமயங்களையும் மதித்து தனது சமூகச் சேவை பணிகளை ஆற்றியுள்ளார். இதற்கு ஆதாரமாக அவரது பெயருக்குப் பின்னால் உள்ள விருதுகள் முன்னுரிமைச்சான்றாகும். துணுக்காண் பிரதேச செயலகப்பிரிவில் சமய சமூக நிறுவனங்கள், ஆலயங்களில், அவரது அங்கத்துவமும், வழிகாட்டலும், நேரடியாக அடியேன் கண்டவற்றையே இங்கு குறிப்பிட்டிருக்கின்றேன். இவரது குடும்பம் இவரது சமய சமூகப்பணி, அரசபணி, என்பன சிறப்புற பின்னணியாக அமைந்து இறைவன் கொடுத்த வரமேயாகும்.

நிர்வாக கிராம சேவை அலுவலர் அவர்களின் ஓய்வுகாலம் ஆன்மீகவழியில் பூரணமாக ஈடுபாடு கொள்ள வேண்டும். அவரது இறைபணி அவரது சேவைப் பிரதேசத்தக்கு தேவையாக உள்ளது. என்பதனை அறிவேன். அவ்வகையில் ஓய்வுக்காலம் இறைபணியாக அமைய யோகாம்பிகை உடனுறை யோகபுரநாதர் என்றும் திருவருள் புரிய வேண்டும். என யோகபுரநாதர் திருப்பாதம் பணிந்து இவ்வாசிச் செய்தியை தெரிவிப்பதில் சிவனருள் துணைக் கொண்டு பெருமகிழ் வடைகின்றேன்.

"ஓம் சாமியே சரணம் ஐயப்பா"
"அன்பே சிவம்"

சைவசமயத் தலைவர்
உலக சைவத்திருச்சபை - இலங்கை
கு. சுமுகலிங்க சிவாச்சாரியார்.
கலாபூஷணம், கலைநகரி, கலைமாமணி
ஈழவூர் சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர் J.P



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி ...

சின்மயா மிஷன்,
இல 9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.
07. 12. 2018

அகவை அறுபதைப் பூர்த்தி செய்து 03.01.2019 இல் மணிவிழா கொண்டாட இருக்கும் திரு.சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்கள் 1983ம் ஆண்டு யூலை மாதத்தில் இருந்து அரசசேவையில் இணைந்து விசேடசேவை உத்தியோகத்தர், கிராம அலுவலர் ஆகிய பதவிகளை வகித்து தற்பொழுது நிர்வாக கிராம அலுவலகராக துணுக்காய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி ஓய்வு பெற உள்ளார்.

இவர் தனது வாழ்வாதாரத்தைப் பெறும் பொருட்டு அரச சேவையில் கடமையாற்றும் போதே தனது ஓய்வு நேரங்களில் பல பொதுப்பணிகளில் ஈடுபட்டதால் அண்மையில் "தேச மானிய விருது","தேச கீர்த்தி விருது" ஆகியவற்றை இலங்கை மனித உரிமை அமைப்பும், ஆன்மீகம் சார் செயற்பாடுகளில் பணியாற்றியதால் "சிவனருட்செல்வர்" மற்றும் "அறநெறி சான்றோன்" ஆகிய விருதுகளை உலக சைவத் திருச்சபையும் வழங்கிக் கௌரவித்துள்ளன.

மேலும் "லங்கா கீர்த்தி" எனும் விருதினை மட்டக்களப்பு விஸ்வம் பல்கலைக் கழகம் வழங்கியுள்ளது. அத்துடன் 2016ஆம் ஆண்டில் இருந்து சமாதான நீதவான் ஆகவும் பணியாற்றி வருகின்றார். இவை இவரது சுயநலமற்ற பணியையும், தொண்டு மனப்பான்மையையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

யுத்த காலத்திலும் மக்களோடு நின்று அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்ய அவரது மனோபலமும், இறையருளும் துணை நின்றது என்றால் மிகையாகாது.

இத்தகைய பொதுப் பணிகளில் ஈடுபட்டவர்கள் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுவது முழு நேரமும் அப்பணிகளில் ஈடுபட வசதியாக அமையும். திரு.சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களின் ஓய்வு கால வாழ்வு சிறப்பாக அமையவும், பணிகள் தொடரவும், அவரது மணிவிழா சிறப்பாக நடைபெறவும், அதனை முன்னிட்டு வெளிவரும் மலர் சிறப்பாக அமையவும் ஆசி வேண்டி எல்லாம் வல்ல பரம் பொருளையும் பூஜ்ய குருதேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

இறைபணியில்,

பிரமச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமிகள்
சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகன் மாண்பு பகிர்வதில் மகிழ்ச்சி...!

நிலவளமும் நீர்வளமும் இயற்கை அழகும் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்தில் அணிஞ்சியன்குளம் யோகபுரம் கிராமத்தில் 1959ஆம் ஆண்டு சிற்றம்பலம் என்ற பெரியாருக்கு சண்முகநாதன் என்கின்ற புதல்வன் முருகப்பெருமான் அருளோடு அவரின் பெயரோடு பிறந்தார. அவரே இன்றைய மணிவிழா நாயகன். மனிதர்களாகப் பிறப்பெடுப்பதும் நீண்டு வாழ்வதும் பல செல்வங்களையும் பெரும் பேறுகளையும் அடைவதும் வாழ்வொழுகின்ற காலப்பகுதியில் எவ்வாறெல்லாம் அமைந்துவிடும் என்பதும் விடாமுயற்சியால் எதனையும் சாதிக்கலாம் என்கின்ற யதார்த்த பூர்வமான மனிதராக திகழ்ந்தவர்தான் அவர்.

எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய திரு சி .சண்முகநாதன் ஐயா அவர்கள் கல்விச் செல்வம் தான் அவரின் அத்தியாயம். ஆரம்பக்கல்வியின் பின் உயர் நிலைக் கல்வியை மு/யோகபுரம் மகாவித்தியாலத்தில் கற்றறிந்து மேலதிக கல்வியையும் பெற்றுக் கொண்டு இருந்த காலப்பகுதியில் 01-07-1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் விசேட சேவை உத்தியோகத்தராக துணுக்காய் பிரதேச செயலகத்தில் இவரின் அரச பணி ஆரம்பமாகின்றது.


பின்னர் 1987ஆம் ஆண்டில் கிராம அலுவலர் பதவி நிலையில் நீண்ட காலம் இவரின் பணி தொடர்கிறது. அடுத்து அவரின் சேவையின் அடிப்படையில் நிர்வாக கிராம அலுவலர் என்கின்ற பதவி 01-10-2017ல் கிடைக்க பெறுகிறது. இறைவன் திருவருளால் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக துணுக்காய் பிரதேச செயலகத் தில் பணியாற்றி ஓய்வு நிலை காணும் சண்முகநாதன் ஐயாவிற்கு மணி விழா எடுப்பது சாலச்சிறந்ததாகும். அந்த வகையில் குடும்பத்தினரின் உயர்வுக்காகவும் பிரதேச முன்னேற்றம், கலை கலாச்சாரம், பாரம்பரியம் சிதைவடையாமல் பாதுகாக்கவும் இவர் பல முயற்சிகளை எடுத்து நடைமுறைப்படுத்திய வரலாறுகளும் உண்டு.

குடும்பத்தை எடுத்துக் கொண்டால் இரு பிள்ளைகள். பெண் பிள்ளையான துவாரகா மருத்துவராகவும், மகன் சண்சயன் யாழ்பல்கலைகழகத்தில் விஞ்ஞானப்பிரிவு மாணவனாகவும், இவரின் மனைவி திருமதி.சறோஜா அவர்கள் 1989ம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து 2006ம் ஆண்டு வரை மு/யோகபுரம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக பணியாற்றி இருந்தார் என்பதும், மணிவிழா நாயகனும் அவர்தம் இரு பிள்ளைகளும் கல்வி கற்ற முன்னிலையாளர்கள் என்பதும் பெருமைமிக்க விடயமாக நாம் பார்க்கின்றோம். ஆகவே வாழ்த்தும் செய்தியில் இவைகளை இணைப்பது சிறப்பான அம்சமாகும் எனக் கருதுகிறோம்.

மேலும் ஓர் அரச உத்தியோகத்தர் தனதுகடமைகளைச் செவ்வனே நிறை வேற்றி மேலதிக பொறுப்புக்களைப் பொறுப்பேற்றுச் செய்வதென்பது எல்லோராலும் முடியாத காரியமாகும். ஆனால் இவர் பொதுவேலைத் திட்டங்கள் ஆலயங்களின் உயர்வுக்குப் பங்களிக்கின்ற தன்மைகள். முருகன் ஆலயம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமண பந்தத்தில் இணையும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் ஆலயம், நரசிங்க வைரவர், அணிஞ்சியன்குளம், சித்தி விநாயகர் ஆலயம், தேறாங்கண்டல் முருகன் ஆலயம் போன்ற ஆலயங்களின் தலைவராகவும், உறுப்பினராகவும் செயற்பட்டு நற்கருமம் ஆற்றியுள்ளார்.

அத்தோடு எமது பாரதிநகர் பத்திரகாளி அம்மன் ஆலய வழிபடுவோர் சபைத் தலைவராகப் பணியாற்றி அம்பாளின் அனுக்கிரகத்தையும் பெற்றுக் கொண்டார். அத்தோடு மகா கும்பாபிஷேக நிகழ்விற்குத் தனது முழுமையான பங்கை நல்கியிருந்தார்.

மேலும் தேசமானிய விருது, தேசகீர்த்தி விருது, சிவனருட்செல்வர் விருது, லங்கா கீர்த்தி விருது, அறநெறி சான்றோன் எனப் பல விருதுகளைப் பெற்று உயர் நிலையடைந்தார்.

அத்தோடு சமாதான நீதவான் பட்டமும் பெற்றுக்கொண்டார். ஆகவே மிகப் பெரும் வரலாற்று நாயகனாக மணிவிழாக்காணும் திரு.சி.சண்முகநாதன் ஐயா அவர்கள் பதவியில் ஓய்வுநிலையடைந்தாலும் அவரின் சமயப்பணியும் பொதுப் பணியும் தொடரவேண்டும் என எல்லாம் வல்ல பத்திரகாளியம்பாளின் தாள்பணிந்து வாழ்த்தி நிற்கின்றேன்.

**"மேன்கொள் சைவ நீதி விளங்குக"**

**சுபம்.**

விஸ்வப் பிரம்ம ஸ்ரீ
கந்தையா கோவிந்தராசா
பாரதிநகர் பத்திரகாளியம்பாள்
ஆலய பூசகர்.

---

**சந்தோசம்.**

சந்தோசம் எங்கு இருக்கின்றது.?

சந்தோசம் என்பது நம்மிடமே உள்ளது. பத்துவருட காலமாக ஒரு தங்கச் சங்கிலியை பயன்படுத்தி வருகிறீர்கள். திடீரென்று காணவில்லை. உங்கள் மனம் என்ன பாடுபடும்.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு தங்கச் சங்கிலி கைக்குக் கிடைத்து விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். உங்கள் மனம் எவ்வளவு மகிழ்ச்சி அடையும்! மகிழ்ச்சிக்கு எல்லை இருக்காது. ஆனால் அதே தங்கச் சங்கிலி பத்து வருடகாலமாக உங்களிடம் இருந்தது. தினமும் அதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தீர்களா? இல்லையே! அதனால் சந்தோசம் என்பது உங்களுக்குள் தான் இருக்கிறது.

**மன உளைச்சல் மறைய**

சிலருக்கு மன உளைச்சல் அதிகம் இருக்கும். அவ்வப்போது மனப்போராட்டம் உண்டாகும். ரோஹினி நட்சத்திரம் அல்லது பௌர்ணமியன்று நவக்கிரகத்தில் உள்ள சந்திர பகவானுக்கோ அல்லது சிவாலயத்தில் உள்ள தனித்த சந்திர பகவானுக்கோ தயிர்சாதம், நைவேத்தியம் செய்து நெய் தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து வழிபட்டு வந்தால் மன உளைச்சல் குறையும். நெய்தீபம் அவரவர் விருப்பப்பட்ட எண்ணிக்கையில் ஏற்றலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துச்செய்தி...!

திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா பா.உ.,
இ.தி.சே - 1, முதுகலைமாணி, கலைமாணி (சிறப்பு)
Dip.In.Planning.
தொலைபேசி / தொலைநகல் : 021 2283500,
கையடக்கத் தொலைபேசி : 077 4188975, 077 3453156.
இல : 278/3,
பாரதிநகர், யோகபுரம்,
இலங்கை.
மின்னஞ்சல் : ddpshanthi@gmail.com.

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

Hon Mrs. Shanthi Sriskandarajah M.P
SLPS – 1, MA, BA.Hons,
Dip.In.Planning.
T.P : 021 2283500.
Mobile No : 077 4188975, 077 3453156.
No : 278/3,
Barathinagar, Yogapuram,
Sri Lanka.
Email : ddpshanthi@gmail.com.

10.12.2018

## மணிவிழா வாழ்த்துச்செய்தி

03.01.2019 அன்று மணிவிழாக்காணும் துணுக்காய் பிரதேச செயலக நிருவாக கிராம அலுவலர் திருவாளர். சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

அணிஞ்சியன்குளம், யோகபுரத்தை சேர்ந்த திருவாளர். சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்கள் 01.09.1983இல் விசேட சேவை உத்தியோகத்தராக அரச சேவையில் இணைந்து கொண்டார். தொடர்ந்து 01.06.1987 இல் கிராமசேவை அலுவலர் பதவியில் இணைந்தார். அன்றுதொட்டு பல்வேறு சேவைகளை ஆற்றிவரும் இவர் யுத்த காலத்திலும் கூட தனது பதவிநிலை மற்றும் கடமைக்கு அப்பாற்பட்டு முல்லை மண்ணின் பல பகுதிகளிலும் தனது அயராத சேவையின் மூலம் மக்கள் மனங்களில் இடம்பிடித்துள்ளார். இச்சேவைகளின் பயனாக இவரது பிள்ளைகள் அனைவரும் இன்று நல்லதொரு நிலையில் இருக்கின்றமை இறைவன் இவருக்கு அருளிய வரமாகும்.

இவர் துணுக்காய் பிரதேச கலாசார பேரவையின் உறுப்பினராகவும், பல்வேறுபட்ட சமூகப்பொது அமைப்புக்களின் நிர்வாகப்பதவி நிலைகளிலும் இடம்பெற்று சேவையாற்றி வருவதுடன், சைவசமயத்தை வளர்த்தெடுக்கும் செயற்பாடுகளுக்காகவும் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி வருகின்றார்.

அவ்வகையில் இவருடைய எதிர்காலமும், ஓய்வு காலமும் சிறப்புற அமையவும், இவருடைய செயற்பாடுகளும், சேவைகளும் மேலும் வளரவும் இறைவனை பிரார்த்தித்து மணிவிழா நாயகனுக்கு மீண்டும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

மக்கள் சேவையில்,

திருமதி சாந்தி ஸ்ரீஸ்காந்தராசா
பாராளுமன்ற உறுப்பினர்
வன்னி மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துக்கள்...

மணிவிழாக் காணும் சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்கள் மல்லாவிப் பிரதேசத்தின் பெயர் சொல்லிக் குறிப்பிடக்கூடிய ஒரு வெள்ளை நிறமுத்து. மக்கள் சேவையான கிராம சேவையில் பல களம் கண்ட ஒரு நல்ல மனிதர். மனித உரிமைகளை மதித்து நல்லபண்பாட்டுடன் அவர் வாழ்ந்தார் என்பதைக் குறித்துச் சொல்ல அவர் பெற்ற தேசமானிய விருது, தேசகீர்த்தி விருது, சிவனருட் செல்வர் விருது, லங்காகீர்த்தி பட்டம், சமாதான நீதவான் பட்டம், அறநெறிச்சான்றோன் பட்டம் போன்றவை போதும், இப்படியும் ஒரு மனிதன் அதிகப்படி தற்புகழ் பேசாமல் அடுத்தவர் மனம் நோகாமல் அமைதியாக மக்களுடன் சேவையாளனாக வாழ முடியும் என்பதற்கு சி. சண்முகநாதன் ஐயா ஒரு அடையாளம். அவர் தன் சேவையில் மணிவிழா காண்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.

DR.சி.சிவமோகன்<br>
வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்<br>
இணை தலைவர் முல்லைமாவட்ட அபிவிருத்தி குழு<br>
இலங்கை தமிழரசு கட்சி<br>
நிறைவேற்று பணிப்பாளர் வன்னி நிறுவனம்.

---

**இல்லறம் நல்லறமாக:**

இல்லறம் நல்லறமாக இல்லத்தாள் செய்ய வேண்டிய பரிகாரம்

பூச்சிகள் இல்லாத நல்ல அழகிய காம்புகளுடன் கூடிய மல்லிகைப்பூ 108 அல்லது 333 எடுத்துக்கொண்டு வீட்டில் உள்ள மகா கணபதி திருவுருவப் படத்திற்கோ அல்லது திருவுருவச் சிலைக்கோ கீழ்க்கண்ட மந்திரங்களை திரும்பத் திரும்பச் சொல்லி ஒவ்வொரு பூக்களாக அவருடைய பாதார விந்தங்களில் சேஉக்க வேண்டும்.

ஓம் ரதியை ஹ்வாஹா<br>
ஓம் ரிதியை ஸ்வாஹா<br>
ஓம் ஸ்ரீயை ஸ்வாஹா<br>
ஓம் ஸ்ரீபதையை ஸ்வாஹா

என்ற மந்திரங்களைப் பயன்படுத்தி திரும்பத் திரும்ப ஜெபம் செய்யவும் இல்லறம் நல்லறமாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிய சாதனையாளர்...!

**"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று"** என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க இயற்கை எழில் கொஞ்சும் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள அணிஞ்சியன்குளம், யோகபுரம் எனுமிடத்தில் 03.01.1959 ல் அவதரித்து, பல சமூக சேவை களுக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவை நாயகனாக மணிவிழா காணும் திரு. சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களுக்கு சேவைநலன் பாராட்டி வாழ்த்துக்களை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

திருவாளர் சி.சண்முகநாதன் அவர்கள் 01.07.1983 ம் ஆண்டில் விசேட சேவை உத்தியோகத்தராக அரச சேவையில் காலடி பதித்து பின்னர் 01.06.1987 காலப்பகுதியில் இருந்து கிராம அலுவராக கடமையாற்றி பின்பு 01.10.2017 ல் இருந்து பிரதேச செயலகம் துணுக்காயில் தனது தொடர்ச்சியான சேவையினைத் தொடர்ந்தவர்.

மல்லாவி S.S. சண் எனும் புனைபெயர் கொண்ட இவர் தனது சேவைகளின் அர்ப்பணிப்புக்காக ஈட்டிக் கொண்ட விருதுகளும், பட்டங்களும் ஏராளமானவை. அவ்வகையில் தேசமானிய விருது, தேசகீர்த்தி விருது, அறநெறிச்சான்றேன், லங்காகீர்த்தி, சமாதானநீதிவான் போன்றன இவரால் தனதாக்கிக் கொள்ளப் பட்ட விருதுகளும் பட்டங்களுமாகும்.

இதனைவிட தனது பிரதேசத்தில் மாத்திரமின்றி மல்லாவியின் ஏனைய பல பிரதேசங்களிலும் உள்ள சமூக நிறுவனங்கள், சனசமூக நிலையம், ஆலய நிர்வாகங்கள், கமக்கார அமைப்பு, கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் துணுக்காய் பிரதேச இந்துமகாசபை போன்ற பல்வேறு அமைப்புக்களினதும், பரிமாண வளர்ச்சிக்காகப் பாடுபட்ட ஒரு சமூக சேவையாளன் எனக் கூறின் மிகையாகாது.

ஒரு கிராமசேவையாளனாகவும், கிராம அமைப்புக்களின் அங்கத்தவராகவும் தனது தொழில் சார் நடவடிக்கைகளுக்கு பங்கம் விளைவிக்காமல் இரண்டுக்கும் இடையேயான சமநிலையினைப் பேணி அப்பழுக்கற்ற சேவையாற்றிய அலுவலராக இருந்தமையினை நான் நன்கு அறிவேன். தனது சேவைக்காலம் முழுவதையும் சமூக சேவைக்காகவே மாற்றியமைத்த இவரது சேவைகளின் அர்ப்பணிப்பானது மணிவிழாக் காலத்தோடு மட்டும் நின்றுவிடாது **"விழுதெறியும் ஆலமரம் போல்"** தொடர்ந்தும் சேவை பரப்பி முன்னுதாரணமாகத் திகழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களும் நன்றிகளும் உரித்தாகட்டும்.

**திருமதி றூபவதி கேதீஸ்வரன்,**
**மாவட்டச் செயலாளர்,**
**முல்லைத்தீவு.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



உலக சைவ மகா சபையிடமிருந்து விருது பெறும் போது




மக்கள் சேவைக்கான விருதுகளுடன் நாயகன்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துச்செய்தி...!

016937


தொலைபேசி இல / Telephone no: 023 2222235
தொலைநகல் / Fax: 023 2222232
மின்னஞ்சல் / E-mail: ds@mannar.dist.gov.lk, gamannar@gmail.com
இணையதளம் / Web Site: www.mannar.dist.gov.lk


பொது மக்களுக்கான மகத்தான சேவை
Excellent Service for the Public

எனது இல / MY No: MN/GA/MESSAGE/08

உமது இல / Your No:

மாவட்டச் செயலகம், மன்னார்
දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, මන්නාරම
DISTRICT SECRETARIAT, MANNAR

திகதி / Date: 06/12/2018

<u>மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி</u>

துணுக்காய் பிரதேச செயலகத்தின் நிர்வாக கிராம உத்தியோகத்தர் திரு.சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதற்காக முதலில் தேடிவரும் அரச பணியாளர் கிராமஅலுவலர் ஆவார். எனவே, இத்தகைய பதவி கைவரப்பெற்ற அனைவரும் பொதுமக்களுடன் நல்லுறவைப் பேணுபவர்களாகவும், இன்சொல் பேசுபவர்களாகவும், பொதுமக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறுபவர்கள் என்ற அடிப்படையில் எதுவித பிரதியுபகாரமும் பெறாது பணியாற்றுபவர்களாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறு அரசபணியாற்றுபவர்களே இறுதிவரை பொதுமக்களின் தோழர்களாக விளங்க முடியும்.

1983.07.01இல் விசேடசேவை உத்தியோகத்தராக அரச சேவையில் இணைந்துகொண்ட திரு. சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்கள், பின்னர் கிராமசேவை அலுவலராக பதவியுயர்வு பெற்றார். தான் கடமையாற்றிய கிராம அலுவலர் பிரிவுகள் அனைத்திலும் பொதுமக்களுக்கு நன்கு பரிட்சயமான அலுவலராக இவர் கடமையாற்றியிருக்கின்றார். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற கூற்றுக்கு அமைவாக, மக்கள் பணியை முன்னெடுத்த இவர் பொதுமக்களுடன் நல்ல உறவை பேணிவந்திருக்கின்றார்.

இதற்கு இவர் கிராம மட்ட அமைப்புக்களில் தலைவர், செயலாளர், போசகர் என வகித்த பதவிகள் ஓர் சான்றாகும். அகில இலங்கை சமாதான நீதவான்கள் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளரான இவர், சிறந்த கலைஞரும், நேரடி வர்ணனையாளரும் கூட. இதனால் இவரை மல்லாவி S.S.சண் என்ற புனைபெயர் கொண்டும் அழைப்பர். தேசமானிய, தேசகீர்த்தி, சிவனருட்செல்வன், லங்கா கீர்த்தி, அறநெறிச்சான்றோன் ஆகிய பட்டங்களைப்பெற்றுக்கொண்ட இவர், கூட்டுப்பிரார்த்தனை செய்தல், திருமுறை ஓதுதல், சமய, சமூக பொது விழாக்களை தலைமையேற்று நடாத்துதல் போன்ற கடமைகளையும் சிறப்புற நிறைவேற்றி வந்துள்ளார்.

மணிவிழாக்காணும் நிர்வாக கிராம அலுவலர் திரு. சிற்றம்பலம் சண்முகநாதன் சிறந்த அரச அலுவலராக தனது பணியை ஆற்றியிருக்கின்றார். நான் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிய காலப்பகுதியில் இவரது அரச பணி மற்றும் சமூகப்பணிகள் பற்றி அறிந்திருக்கின்றேன்.

எனவே, பொதுமக்களின் முழுநேர சேவகனாக பணியாற்றி தற்போது அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச்செல்லும் திரு.சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களின் ஓய்வுக்காலம் மகிழ்ச்சியாக அமைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அவரது சமூக சேவை தொடர்ந்தும் பிரகாசிக்க எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

C.A.மோகன்றாஸ்,
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர்,
மன்னார்.


Add.Govt.Agent: 023 2222226 | Chief Accountant: 023 2223214 | Planning Director: 023 2222283 | Chief Internal Auditor: 023 2222215 | Administrative Officer: 023 2222213





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகப் பாங்குள்ள நிர்வாகி...!

துணுக்காய் பிரதேச செயலகத்தின் மூத்த கிராம அலுவலரும் அனுபவமும் ஆற்றலும் மிக்கவரான திருவாளர் சிற்றம்பலம் - சண்முகநாதன் அவர்கள் தனது 60 ஆவது வயதை பூர்த்திசெய்து மணிவிழா காண்பதையிட்டு அவருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

திருவாளர் சண்முகநாதன் அவர்கள் 1959.03.01ம் திகதி பிறந்தார். இளமையில் கல்வியிலும்,சமூக சேவையிலும் அக்கறையும் ஈடுபாடும் உடையவராக விளங்கி 1987.07.01ம் திகதி விசேடசேவை உத்தியோகத்தராக நியமனம் பெற்றார். அதன் பின்பு 1987.06.01இல் கிராம அலுவலராக நியமனம் பெற்று துணுக்காயில் உள்ள பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் கிராம அலுவலராக தன்னுடைய கடமையை திறம்பட ஆற்றி 01.10.2017ல் இருந்து நிர்வாககிராம அலுவலராக துணுக்காய் பிரதேச செயலகத்திற்கு இணைக்கப் பட்டார்.

மேலும் துணுக்காயில் உள்ள ஆலயங்கள், பொது அமைப்புக்களில் தலைவர், செயலாளராகத் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார். அத்துடன் துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச்சங்க அணிச்சியன்குளம் கிளை தலைவராகவும் துணுக்காய் இந்து மகாசபையின் உப தலைவராகவும் பணியாற்றி வருகின்றார். மேலும் இலங்கை சமாதான நீதவான் சங்க முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளராகவும் பணியாற்றி வருகின்றார். அத்தோடு கலை அனுபவம் மிக்க ஒருவராகவும், துணுக்காய் பிரதேச கலாசார பேரவையின் உறுப்பினராகவும் விளங்குகிறார்.

மேலும் கந்தபுராணம், திருவெம்பாவை ஓதுதல், சமய விழாக்களை முன்னின்று நடாத்துதல், கோயில் கூட்டுபிரார்த்தனைகளை மேற்கொள்ளல் என்பவற்றுடன் ஒரு கிராம அலுவலராக முழுமையான வகிபங்கை ஆற்றிய ஒரு சிறந்த கிராமசேவையாளர். இவருடைய சமூக,சமயப் பணிகளை போற்ற இலங்கை மனித உரிமை அமைப்பு தேசமானிய, தேசகீர்த்தி விருதினை 2017,2018ம் ஆண்டுகளில் வழங்கி வைத்ததும்,உலக சைவத் திருச்சபை - 2017ல் சிவனருட் செல்வன் என்ற பட்டத்தையும், மட்டக்களப்பு விஸ்வம் பல்கலைக்கழகம் 2018ல் லங்கா கீர்த்தி என்ற பட்டத்தையும்,உலக சைவத் திருச்சபை - 2018இல் அறநெறிச் சான்றோன் என்ற பட்டத்தையும் வழங்கி கௌரவித்தது. அத்தோடு 2016ம் ஆண்டிலிருந்து ஒரு சமாதான நீதவானாகவும் பணியாற்றி வருகின்றார். அவருடைய சேவைக்காலம் ஒரு சிறப்பு மிக்க காலம். காலம் அறிந்து பணியாற்றியவர். எப்பொழுதும் இளமை உள்ளமும் உடல் வாகுடனும் திகழ்ந்தார். ஓய்வு காலத்திலும் சமூகத்துடன் முழுமையாக இணைந்து பணியாற்றப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு சி.குணபாலன்**
**மேலதிக அரசாங்க அதிபர்**
**மன்னார்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி....!

மக்கள் சேவை என்பது மனங்களால் ஒன்றிணைந்து ஆற்றப்படும் சேவையாகும். இந்த சேவை தமிழர்களது வரலாற்றில் தொன்றுதொட்டு இருந்து வருகின்றது. மன்னர்கள் காலத்தில் இருந்து ஒரு அரசின் சார்பாக மக்களுக்கு சேவை ஆற்றுவதற்கு அரச சேவையாளர்களை மன்னர்கள் நியமித்து கிராம நிர்வாகத்தினை நடத்தி வந்த செய்தியினை வரலாறுகளிலும் இலக்கியங்களிலும் நாம் கண்டுகொள்கின்றோம். மன்னர்காலத்தில் கிராமங்களது நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர்களை தண்டலையார், உடையார் என்ற சொற்பதங்கள் கொண்டு அழைக்கப்பட்டு வந்திருக்கின்றது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலும் அதனைத் தொடர்ந்து வந்த காலத்திலும் மக்கள் சேவை விருப்புக் கொண்டவர்களை கிராம நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு சார்பாக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டார்கள் அவர்களில் முக்கியமானவர்களாக கிராம சேவகர் காணப்படுகின்றனர். கிராமத்திற்கு சேவை ஆற்றுவதற்காக நியமிக்கப்பட்டதால் அவர்களது பதவிப்பெயரும் கிராம சேவகர் என்ற சொற்பதம் தாங்கி அமைந்திருக்கின்றது.

இத்தகைய கிராம சேவையாளர்களில் மக்களுக்கான சேவைகளைச் சிறந்த முறையில் வழங்கி வருபவராக திரு சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்கள் விளங்குகின்றார். அரச பணியில் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற அதீத விருப்புக் கொண்டவராக விளங்குகின்றார். அரச சேவைக்கு அப்பால் மக்கள் மத்தியில் நன்மதிப்புப் பெற்றவராகவும் விளங்கும் இவர் மக்கள் சேவைகளுக்காக பல்வேறு பட்ட கௌரவப்பட்டங்கள் பெற்றிருக் கின்றார். சமூகத்தில் மக்களுக்க சேவை செய்கின்ற பல்வேறுபட்ட சமூக அமைப்புக்களான ஆலயங்கள், கிராமிய அமைப்புக்கள், பொது அமைப்புக்கள் என பல்வேறு அமைப்புக்களில் இணைந்து தனது மக்களுக்கான சேவை என்ற உயரிய செயற்பாட்டினை மேற்கொண்டு வருவது பராட்டுக்குரியது. சிறப்பாக ஆலயங்களில் நடைபெறும் பஜனை நிகழ்வு, திருமுறை ஓதுதல் நிகழ்வு, ஆலய திருவிழாக்களின் அறிவிப்பாளராகவும், நேர்முக வர்ணனையாளராகவும், தனது தனிப்பட்ட திறமைகளை வெளிக்காட்டி வருகின்றார். 2017 ம் ஆண்டு இலங்கையில் உள்ள கிராம அலுவலர்களில் சிறந்த கிராம அலுவலர்கள் 25 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அதில் இவரும் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டு கௌரவப்படுத்தப்பட்டிருப்பது இவருடைய சேவைக்குக் கிடைத்த சிறந்த சான்றாகும்.

எனவே இத்தகைய சேவை மனப்பான்மை உள்ளவர்கள் அருகி வரும் இன்றைய சமூகச் சூழலில் இவர்களது சேவை மகிழ்ச்சியளிக்கின்றது. இத்தகைய சேவையாளர்களைக் கௌரவிப்பது ஒரு சமூகத்தின் கடமையாகும். அப்போது தான் புதிய சேவையாளர்கள் உருவாவதற்கும் சமூகம் மீது பொறுப்புள்ள ஒரு தலைமுறை உருவாவதற்கும் வழி ஏற்படும். ஆகவே திரு.சி. சண்முகநாதன் அவர்களின் சேவையினைப் பாராட்டி எடுக்கப்படும் விழாவில் வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகழ்ச்சியடைகின்றேன்.

திரு. கு. பிரபாகரமூர்த்தி,
பிரதேச செயலாளர்,
பிரதேசசெயலகம்,துணுக்காய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா வாழ்த்துச்செய்தி...!

அகவை அறுபதிலும் துடிப்புள்ள இளைஞனுக்கு ஈடான சக்தியோடு தனது கடமையிலும் கடமைக்கு அப்பால் பொது வேலைகளிலும் தன்னை ஈடுபடுத்தி இன்று 03. 01. 2019 இல் மணிவிழா காணும் துணுக்காய் பிரதேச செயலகத்தின் நிர்வாக கிராம அலுவலா் திரு.சிற்றம்பலம் சண்முகநாதன் அவா்கள் தேச மானிய, தேச கீா்த்தி போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளாா். அத்தோடு 2016ம் ஆண்டிலிருந்து சமாதான நீதவானாக கடமையற்றுவதோடு பலவேறு சமூக நிறுவனங்களில் தன்னையும் ஒரு பங்காளியாக்கி இன்முகத்தோடு செயறபட்டு வருபவா். மணிவிழாக் காணும் இவரது சேவைகள் மென்மேலும் தொடர வேண்டும்.

இவா் வேலைத்தலத்தில் மட்டுமன்றி தான் பணிபுரிந்த கிராமங்கள் அனைத்திலும் சமய கலாசார நிகழ்வுகளை முன்னின்று செய்பவா். தனது வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்றாற்போல் ஆலய தொண்டுகள். கந்தபுராணம் திருவெம்பாவை ஓதுவதிலும் கூட்டுப்பிரார்த்தனை செய்வதிலும் ஈடுபட்டு சமயத்தை வளர்க்க முனைந்து கொண்டிருப்பவர். இவரது ஆன்மீக வேலைகள் தொடர வேண்டும். இறை ஆசி கிட்டி மகிழ்ச்சியாக வாழ வேண்டும்.

ஏழைகள் ஆதரவற்றவா்களுக்குத் தேவையான உதவிகளை எங்கெல்லாம் தேடிப் பெற்றுக்கொடுக்க முடியுமோ அங்கிருந்தெல்லாம் பெற்று உதவியளிப்பவா். 35 வருட காலமாக யுத்தத்திலும், கஸ்டத்திலும், துன்பத்திலும் மக்களோடு ஒன்றியிருந்து சேவையாற்றி s.s சண் என செல்லப் பெயரெடுத்தவா். இவர் தனது மனைவி, பிள்ளைகள் குடும்ப சகிதம் நோய் நொடிகளற்று நீடூழி வாழவும் மணி விழா காணும் இவரது சேவைகள் சூரிய ஒளியினைப் போல எங்கும் பரவவும் எல்லாம் வல்ல பரம்பொருளை மனதாரப் பிராா்த்தித்து இது போன்ற பலவேறு விழாக்களை இவா் கண்டு மன நிறைவுடன் வாழ வேண்டும் என வாழ்த்துகிறேன்.

திரு இ. பிரதாபன்
பிரதேச செயலாளா்
கரைதுறைப்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா வாழ்த்து...

திருவாளர் சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்கள் மாணவப் பருவத்தில் இருந்தே என்னுடன் ஒன்றாகப் பழகியவர். எல்லோரிடமும் நட்புடன் பழகும் தன்மையுடைய இவர் தனது அரசசேவைக் காலத்தில் கிராம சேவையாளராக கூடிய காலத்தை வசதி குறைந்த கிராமங்களிலேயே கடமையாற்றி வந்ததை நானறிவேன். இவர் தமது சேவையின் போது மக்களிடம் அன்புடன், பண்புடன், இன்முகம் காட்டியே பணிசெய்தார். இவர் கடமையாற்றிய கிராமங்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு சேவையாற்றி அவர்களின் அடிப்படைத் தேவைகளை இனங்கண்டு பெற்றுக் கொடுத்துள்ளார். இவரது அளப்பரிய இச் சேவைகள் காரணமாக மக்களின் பாராட்டைப் பெற்றுள்ளார்.

ஏனைய கிராமங்களில் கூட பல வழிகளிலும் பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாது இருக்கும் வேளையில் சமூக சேவை அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து பணியாற்றி தனது பங்களிப்பைச் செய்துள்ளதன் பயனாகவே இவருக்கு நிர்வாக கிராம அலுவலர் பதவி கிடைத்துள்ளது. இவரது சேவையை வலுப்படுத்தும் முகமாக அமைந்ததே இச்சேவையாகும். ஆன்மீகச் சிந்தனைமிக்க கிராம அலுவலர் திரு சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்கள் ஓய்வுபெறும் இவ்வேளையில் அவர்களைப் பாராட்டி வாழ்த்துக் கூறுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இவரது சேவைக்கு உறுதுணையாக இருந்த குடும்பத்தினர்க்கும் வாழ்த்துத் தெரிவிப்பதோடு இவரது இச்சேவையானது பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் தொடர்ந்து கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அம்பலவாணர் அமிர்தலிங்கம்
தவிசாளர்
பிரதேச சபை
துணுக்காய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதனையாளர் சண்முகநாதன்...!

துணுக்காய் பிரதேசசெயலகத்தில் கடமையாற்றி மணிவிழாக் காணும் திரு சி. சிற்றம்பலம் சண்முகநாதன் நிர்வாக கிராம அலுவலர் இவர்களிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

"ஒரு வாய்ப்பு இருமுறை உங்கள் வீட்டுக் கதவைத் தட்டாது" என்றார் அறிஞர் கம்போர்ட்.

"வாய்ப்புக்கள் வெற்றியின் விதைகள்" கிடைக்கும் நல்ல சந்தர்ப்பங்களை மற்றவர்களுக்குத் தீங்கு ஏற்படாத வகையில் பயன்படுத்தி வெற்றி பெற வேண்டும். கிராம அலுவலர் S.S கிடைத்த சந்தர்ப்பத்தைத் திறமையாகப் பயன்படுத்தியுள்ளார். என்பதை அவரது சேவை உயர்வும் பெற்றுக் கொண்ட "தேசமானி", "திருவருட்செல்வன்", "லங்கா கீர்த்தி", "தேசகீர்த்தி" என்ற விருதுகளும் எடுத்தியம்புகின்றன.

சேவையில் மனிதநேயம், சமூகப்பற்று, சமூக ஒற்றுமை, சமூகவளர்ச்சி, நேரம் தவறாமை, கடமையுணர்வு என்பவற்றில் எல்லாம் மிகக் கவனம் செலுத்தி மக்களிற்கும், மேலதிகாரிகளுக்கும். ஏற்றவகையில் சிறப்பாகச் செயலாற்றி யுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடமைகளை ஒரு பழுவாக நினைக்காமல் மலர்ந்த முகத்துடன் செய்கின்றவர். அலுவலகத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பாட்டுப்பாடி எல்லோரையும் மகிழ்வித்து, சிரிக்கவைக்கும் தன்மையும் கொண்டவர்.

ஓய்வு பெற்ற பின்பும், கிராம அமைப்புக்கள், சமயப்பணிகள், அபிவிருத்தி சங்கங்கள் போன்றவற்றில் பங்குகொண்டு மக்களால் நினைவு கூரப்படுபவராகவும், பேசப்படுபவராகவும் திகழ்வார் என்பதில் சந்தேகமில்லை.

மேலும் வளர்ச்சிகள் பல பெற்று மனைவி, மக்கள் குடும்ப உறவுகளுடனும் சந்தோஷமாக நோய்நொடியின்றி நீண்ட காலம் வாழ வேண்டும் என்று மனம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

திருமதி. ப. தியாகராசா,
முன்னாள் உ. அ. அதிபர் துணுக்காய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா வாழ்த்துச் செய்தி

அகவை அறுபதில் அகமகிழும் கிராம அலுவலர் சண்முகநாதனுக்கு
காரை சண்முகம் மனோன்மணி ஞாபகார்த்த சற்சங்கம் ஸ்தாபகர்
ச.சிவஞானம் சிவதர்மவள்ளல் அவர்களின் வாழ்த்துச் செய்தி.

எம் இனிய தமிழ்மொழிக்கும் அன்பே சிவமாக விளங்கும் சைவ மதத்திற்கும் கலை இலக்கியங்களுக்கும் சற்சங்கத்திற்கும் சமூகத்திற்கும் தம்மையே அர்ப்பணித்து தொண்டாற்றி வருகின்ற பெருமக்களைப் போற்றிக் கௌரவப்படுத்தல் அவசியமாகும். இதனைச் சமூகம் மனிதநேயத்துடன் செய்யும் நன்றிகளாகும். சமூக சமயப் பணிகளைச் செய்பவர்களுக்கு மனநிறைவைக் கொடுப்பதோடு அவர்களின் இலட்சியங்களை முற்றாக நிறைவேற்றுவதற்கும் வழிவகுக்கும். இவ்வாறு பெரும் பணியாற்றி மணிவிழாக் காணும் யாழ்ப்பாணத்தில் பிரதேசத்திலும் துணுக்காய் பிரதேசத்திலும், முல்லை மாவட்டத்திலும் அளப்பெரிய சேவைகளை வழங்கி மக்கள் சேவையே மகேசன் சேவை எனப் பணிபுரிந்தவரை போற்றிப் பெருவிழா எடுப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மைகடலிற் பெரிது

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க மல்லாவிப் பிரதேசத்திலே தனது சேவைக்காக வாழ்ந்து வந்து சைவ சமயப் பணிகளையும் தமிழ்ப் பணிகளையும் தொடர்ச்சியாக முப்பத்தைந்து வருடங்கள் செய்து வந்தவர். சண்முகம் மனோன்மணி ஞாபகார்த்த சற்சங்கத்தில் 2015ஆம் ஆண்டிலிருந்து ஆலயப் பணிகள், அறநெறிப்பாடசாலைப் பணிகள் ஆன்மீகச் சொற்பொழிவுகள் நடாத்தி வந்தவர். அறநெறிப் பாடசாலையின் அபிவிருத்திக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டவர் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சமய விழுமியக் கல்வியை வழங்கி சைவ சமயத்தைத் தழைத்தோங்கச் செய்தவர். எமது சங்கத்தின் தலைவராக இருந்து பல அரும்பணிகளை ஆற்றி வந்தவர் என்பது நாடறிந்த உண்மையே. ஆன்மீகச் சொற்பொழிவுகளிலும் தமிழ்ச் சொற்பொழிவுகளிலும் கருணை உள்ளம் கொண்ட ஓர் பேச்சாளராக விளங்கியவர். வன்னி இடப்பெயர்வுக் காலங்களில் கண்ணீருடன் நின்ற எம் தமிழ் மக்களுக்காய் அவர்களது துயரங்களில் பங்கு கொண்டு பல மரணச்சடங்குகளுக்கும் உதவிகள் செய்துள்ளார். அரசினால் முன்னெடுக்கப்பட்ட நிவாரணப் பணிகளையும் துரிதமாகச் செய்து கொடுத்தவர். வீடற்ற மக்களுக்கு வீட்டுச சிபாரிசுகளைச் செய்தவர். இவ்வாறு துணுக்காய், மல்லாவி, இயங்கங்குளம், என முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் அரிய பல சேவைகளைச் செய்தவர். திரு.சண்முகநாதன் அவர்களின் பணிகள் சொல்லில் அடங்கா. இவ்வாறான ஓர் சமூக சேவையாளருக்கு மணிவிழா எடுப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பூரண சுகத்துடனும் கீர்த்தியுடனும் வாழ்ந்து செந்தமிழுக்கும் சைவசமயத்திற்கும் பெரும்பணியாற்ற வேண்டுமென்று ஈழத்தின் வடபால் அமைந்துள்ள ஈழத்துச் சிதம்பரத்தில் வீற்றிருக்கும் சுந்தரேஸ்வரப்பெருமான் சமேத சௌந்தராம்பிகை அம்பாளையும் வேண்டிப்பணிந்து நீடூழி வாழ வாழ்த்துகின்றோம். வாழீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் காணும் மணிவிழா நாயகன் சிற்றம்பலம் சண்முகநாதன்

அன்புடையீர்!

சீர்குன்றாப்பண்பாளர் மணிவிழாக்காணும் மாண்பாளர் திருவாளர் சிற்றம்பலம் சண்முகநாதன் ஐயாவிற்கு சிதம்பரேஸ்வரன் பாதம் போற்றி வாழ்த்துகின்றேன் வாழீர் சமூக சேவை மாமணியாய் சண்முகநாதன் நாமம் கொண்டீர்

சைவசமயப் பணியாற்ற சண்முகன் வடிவமாய் வந்துதித்தீர் ஆண்டு அறுபது அகவையிலே அறுபதாம் கல்யாணம் என்கின்ற விழாக் காண சஷ்டியபூர்த்தி எனும் மணிவிழா என்றும் அழைக்கப்படுகின்றது. இதை உக்கரதசாந்தி என்றும் அழைப்பார்கள் இவ்விழாவை இனிதே காண வாழ்த்துகின்றோம் வாரீர்.

கலாசார மரபதனைக் கண்ணியமாய்ப் பேணி இறைபக்தி ஆன்மீகம் இணைந்த நல் சேவையிலே சேவையாற்றும் திறனுடையீர் சண்முகம் மணோன்மணி ஞாபகார்த்த சற்சங்கத்தில் சலிக்காமல் சேவை செய்தீர் வேதாந்த ஞானமன்றத்தின் விருப்புடைய வன்னியின் தலைவரானீர் தெய்வீகப் பேச்சாலும் தெவிட்டாத சுவையுடைய கருத்துக்களாலும் சைவசமய விடயங்களை சமரசமாய்ப் பேசிடுவீர் அரசாங்க வேலையிலும் அலுக்காமல் பணி செய்தீர் அறிவுடனே ஆன்மீகம் அறநெறிக் கல்விதனை அலுக்காமல் கற்பித்தீர் துன்புறும் மக்கள் துயர் துடைக்க துணிவுடனே வந்து பல நிவாரண உதவிகள் வழங்கி வைத்தீர் அல்லலுறும் மக்களின் விழிநீர் பல துடைத்தீர் ஆலய முன்றலிலே அன்னதானம் பல செய்தீர் குடிநீர் வசதியையும் நிவாரண உதவிகளையும் குறைவின்றி வழங்கி வைத்தீர் துணுக்காய், மல்லாவி, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாண பிரதேசமக்களின் இடப்பெயர்வு காலங்களில் மக்களுடன் மக்களாய் உயிரைத் துச்சம் என்று எண்ணி நீரும் அங்கு சென்று பணியாற்றினீர் தலை சிறந்த கிராம அலுவலராய் தரமான பட்டங்கள் பல பெற்றீர் கிராமத்தின் சேவகராய் ஆண்டவனின் சேவகராய் ஆலயங்கள் பலவற்றிலும் அரிய பல சேவை செய்தீர் சண்முகம் மணோன்மணி ஞாபகார்த்த சற்சங்க சபையின் வளர்ச்சிக்காய் சலிக்கமால் சேவை செய்தீர் அறநெறிப் பாடசாலையை அன்புடனே வழிகாட்டி ஆற்றல் மிகு ஆசான்களை ஆக்கிவிட்டீர் ஏழை மக்களுக்காய் ஏழைச் சிறுவர்களுக்காய் உம்மை முழுமையாக அர்ப்பணித்தீர் பெருமையுடன் உம்நாமம் போற்றுதற்கும் அளவுள்ளதோ இத்தகைய பெருந்தகையின் சேவையும் நலமும் ஆயுளும் பெருக எல்லாம் வல்ல யோகபுரநாதரை வேண்டிநிற்கின்றோம். இவரது உன்னதமான சேவை மென்மேலும் தொடர சண்முகம் மணோன்மணி ஞாபகார்த்த சபையின் சார்பிலும் கனடா வேதாந்த ஞானமன்றத்தின் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன் வாழீர்.

இங்ஙனம் அன்புடன்

இலங்கைக்கான தலைவர் கனடா வேதாந்த ஞானமன்றம்,

செயலாளர் சண்முகம் மனோன்மணி ஞாபகார்த்த சற்சங்கம்,

காரையம்பதி சோதிடமணி, சற்பிரசங்க சைவமணி, செஞ்சொல்வாருதி,

செஞ்சொல்வேந்தன் செல்வ சண்முகரத்தினம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணிவிழா வாழ்த்துச் செய்தி...!

திருவாளர் சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களது அரும்பணிக்கான மணிவிழா காண்பதை வாழ்த்தி மனமகிழ்வடைகின்றேன்.

1959.01.03ல் பிறந்த இவர் மு/அணிஞ்சியன்குளம் தமிழ்கலவன் பாடசாலையிலும் பின்னர் மு.யோகபுரம் மகாவித்தியாலயத்திலும் தனது கல்வியை நிறைவு செய்து கொண்டு 01.07.1983ல் விசேட சேவை அலுவலராக நியமனம் பெற்று பின்பு 01.06.1987 ல் கிராம அலுவலராகவும் 2017.10.01 தொடக்கம் இன்றுவரை துணுக்காய் பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம அலுவலராகவும் தனது பணியில் ஈடுபட்டு வருகின்றார்.

தனது சொந்தக் கிராமத்திலும், அயற்கிராமங்களிலும், பிரதேச, மாவட்ட மட்டத்திலும் பல சமய, சமூக அமைப்புக்களில் பல்வேறு படிநிலைகளிலும் தனது பொதுத் தொண்டில் இன்று வரை ஈடுபட்டுவருகின்றமை அவரது ஆளுமையினை வெளிக்காட்டி நிற்கின்றது.

யுத்தம் உக்கிரமாக நடைபெற்ற காலப்பகுதியில் இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் வெற்றி கண்ட அவர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் செயலாளராக இருந்து தன்னாலான முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கி மல்லாவி வைத்தியசாலை நிர்வாகத்திற்குப் பெருந்துணையாக நின்று செயற்பட்ட ஒருவர்.

இவற்றின் பயனாக "தேசமானி", "தேசகீர்த்தி", "லங்கா கீர்த்தி", ஆகிய விருதுகளைத் தன்னகத்தே தேடிக் கொண்டதுடன் சமயப் பணிகளிலும், ஆலய வளர்ச்சிகளிலும், அறநெறிக் கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதற்கான வழிகாட்டியாகவும், செயற்படுவதில் அதிக ஈடுபாட்டுடன் தொண்டாற்றியமையின் பயனாக "சிவனருட்செல்வர்","அறநெறிச்சான்றோன்", போன்ற இறைபணிக்கான விருதுகளும் இவரைத்தேடி வந்த நிலையில் இன்று மணிவிழா நாயகனாகத் திகழ்கின்றமை அவர் வாழும் சமூகத்தில் நாம் வாழ்கின்றோம் என்கின்ற பெருமையைத் தேடித்தருகின்றது.

இன்று மணிவிழா காணுகின்ற திருவாளர் சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்கள் அரச சேவையில் மட்டுமன்றி பொதுப் பணிகளிலும், பொதுத் தொண்டுகளிலும் சிறந்து விளங்க ஆக்கமும, ஊக்கமும் நல்கிய அவரது பாரியார் திருமதி. சண்முகநாதனுடனும், மற்றும் பிள்ளைகள், பேரப் பிள்ளைகளுடனும் ஓய்வு காலத்தில் உடல், உள ஆரோக்கியத்துடனும் என் றென்றும் திருத்தொண்டாற்றும் யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் மற்றும் வைத்தியசாலை ஆரோக்கிய விநாயகர் அருளாசிகளுடன் நீடூழிவாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

Dr. கந்தசாமி சுசீந்திரன்,
முன்னாள் வைத்திய அத்தியட்சகர்,
ஆதார வைத்தியசாலை, மல்லாவி.
சுகாதார வைத்திய அதிகாரி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாக கிராம அலுவலராகப் பணியாற்றி ஓய்வுபெறும் திரு. சி. சண்முகநாதன் அவர்களிற்கான மகிழ்வுந்தல்

துணுக்காய் பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம அலுவலராக பணியாற்றிய திரு.சி. சண்முகநாதன் அவர்கள் தனது 35 வருடகால அரசசேவையில் இருந்து ஓய்வு பெறுகின்ற அதேவேளையில் மணிவிழாவினையும் காணுகின்ற இத்தருணத்தில் அவரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.சி.சண்முகநாதன் அவர்கள் துணுக்காய்ப் பிரதேச செயலக நிர்வாக பகுதிகளின் அபிவிருத்தியில் அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றியமையினை அவரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட விருதுகளே சான்று பகர்கின்றன.

ஒரு சமாதான நீதிவானாக இருக்கும் திரு.சி.சண்முகநாதன் அவர்கள் பல் வேறு விதமான தொண்டு நிறுவனங்களின் தலைவராக, செயலாளராக, உறுப்பினராக இருந்து தனது அரச கடமைக்கு மேலதிகமாக செவ்வனே செயலாற்றிக் கொண்டிருக்கின்றமை இப்பிரதேசத்தின் வளர்ச்சியில் அவரின் பற்றுறுதியினையும் ஈடுபாட்டினையும் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

சமூகநல மருத்துவ திட்டங்களை மேற்கொள்வதற்காக தொடர்பினை மேற் கொள்ளும் சந்தர்ப்பங்கள் அனைத்திலும் தாமாகவே முன்னின்று செயற்படுத்தி முடிக்கக் கூடிய ஒருவராக அவதானிக்க முடிந்தது. பல்வேறு வகையான அரச பணிகளிலும் தன்னாலான பங்களிப்பினை வழங்கியிருக்கும் திரு.சி.சண்முகநாதன் அவர்கள், பொது அமைப்புக்களினூடு நிகழ்ச்சித் திட்டங்களை நெறிப்படுத்துவதில் வல்லவராக இருக்கின்றமை போற்றுதற்குரியது.

திரு.சி.சண்முகநாதன் அவர்களின் ஓய்வு காலம் சிறப்புற்று மகிழ்ச்சி கரமானதாக அமைந்து விளங்கவும், ஆரோக்கியமான நீண்ட ஆயுள் பெற்று தொடர்ந்து இப்பிரதேசத்திற்குத் தமது சேவையினை வழங்கவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வைத்தியர் வே.சிவகுலேந்திரா
கிராமிய சித்த வைத்தியசாலை
மல்லாவி
முல்லைத்தீவு.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணிவிழா வாழ்த்துச் செய்தி...!

இயற்கை எழில் நிறைந்த வன்னியிலே அணிஞ்சியன்குளம் எனும் கிராமத்திலே பிறந்து வாழ்வாங்கு வாழ்ந்து மணிவிழாக்காணும் சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களை வியந்து சில வார்த்தைகள் வரைய விளைகிறேன். அமைதியான எளிமையான இறைபக்தியுள்ள வேளாண்மையை விரும்பிச் செய்கின்ற செல்விருந்தோம்பி, வருவிருந்து பார்த்திருக்கும் பண்புடைய தான் மட்டுமல்ல மற்றோரும் சீரும் செழிப்புடனும் வாழ ஆசைப்படுகின்ற பெருமக்கள் வாழும் அணிஞ்சியன்குளம் எனும் கிராமத்தில் இவர் தோன்றினார். புகழ் பூத்த உடையார் வழித்தோன்றலான சிற்றம்பலம் வள்ளியம்மை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்து ஆரம்பக்கல்வியை மு/அணிஞ்சின்குளம் அ.த.க பாடசாலையிலும் தொடர்ந்து மு/யோகபுரம் ம.வித்தியாலயத்திலும் கல்வி கற்றுத் தேர்ந்தார். கல்வியில் பின்தங்கிய பிரதேசமான வன்னிப் பிரதேசத்தில் வாழும் பிள்ளைகள் எல்லா வளமும் அமையப் பெற்றும் பெருமளவில் ஏழைகளாக ஆக்கப்படும் சூழலே நிலவுகின்ற போதிலும் திருவாளர்.சி.சண்முகநாதன் அவர்கள் தன்னுடைய பிள்ளைகளை பல இன்னல்களுக்கு மத்தியிலும் உயர் கல்வி கற்பதற்கேற்ற நிலைக்கு உயர்த்திச் சென்றிருக்கிறார் என்பது மன நிறைவுக்கும், பாராட்டுக்குமுரியதாகும். அத்தோடு மட்டுமல்லாமல் ஏனைய பிள்ளைகளும் கற்கவேண்டும் என்ற அவாவினை உடையவராயிருப்பது மேலும் சிறப்புடைத்து.

விசேட தேவை உத்தியோகத்தராகவும் கிராம சேவையாளராகவும், கிராம சேவையாளர் நிருவாக உத்தியோகத்தராகவும், பதவி உயர்வு பெற்று தான் வாழும் சமூகத்திற்கு சிறப்பாகப் பணிபுரிந்தார் என்பதற்கு அவருக்கு கிடைத்த அங்கீகாரங்களும் கௌரவங்களும் சான்றுபகர்கின்றன. அரிமா சங்க உறுப்பினரான இவர் Lion.சண்முகநாதன் என அன்பாக அழைக்கப்படுவது அவரது சமூகப் பணிக்குக் கிடைத்தசிறப்பு. சமூகத்தின் கல்வி, பண்பாடு, கலை, கலாசாரம், விழுமியம் சார்ந்த விடயங்களில் தீராத பற்றுக் கொண்டவர். பல்வேறு பொதுத்தொண்டு நிகழ்வுகளிலும் நிறுவனச் செயற்பாடுகளிலும் இலை மறைகாயாகவும் நேரடியாகவும் பங்கு கொண்டு பணிபுரிவது இவரது இயல்பு. ஆலயத் திருவிழாக்கள் ஆலயத்திருப்பணி சார்ந்த விடயங்களில் அவர்தம் உழைப்பு அளப்பரியது.

அறுபது ஆண்டுகள் என்பது ஒருயுகம் ஒருயுகத்தை நிறைவு செய்து அவர் புகழ் பரப்பி நிற்பது இறைசித்தம் அவருக்குக் கிடைத்துள்ளது என்பதற்கு அடையாளமாகும். அவர் தம் வாழ்வில் பதவி உயர்வுகள் மட்டுமன்றி சமாதான நீதவானாகவும், தேசமானி, தேசகீர்த்தி போன்ற கௌரவங்களையும் பெற்று ஓங்குபுகழோடு வாழ்ந்திருக்கிறார். மேலும் சிவநெறிச்செல்வர், சிவநெறிச் சான்றோன் போன்ற கௌரவங்களுக்கும் உரித்தானவர். உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் சேவைச் சிறப்பு, சேவை மூப்பு சேவைத்திறமை அடிப்படையில் அகில இலங்கை ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டு இந்தியாவுக்கு புலமைப்பரிசில் அடிப்படையில் அனுப்பப்பட்ட பெருமைக்குரியவர். இன்சொல், புன்முறுவல், கலையாதகல்வி குன்றாத இளமை, குறையாதவாழ்வு பெற்ற இவர் மேலும் பல்லாண்டு வாழ வேண்டும் என வாழ்த்தி நிற்கிறேன்.

அன்புடன் குமாரசாமி சிதம்பரநாதன்
ஒய்வு நிலை பீடாதிபதி
கல்வியியல் கல்லூரி,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழாக் காணும் சமூக சேவையாளனுக்கோர் வாழ்த்து...!

ஈழத்திருநாட்டின் மகுடமாக விளங்கும் முல்லை மாவட்டத்தில் துணுக்காய் பிரதேசத்தின் அணிஞ்சியன்குளம் கிராமத்தில் 1959ல் மண்ணின் மைந்தனாக வந்துதித்த உத்தமர் திரு.சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்கள் இன்று மணிவிழாக் காண்கின்றார். இவர் சிறுவயது தொடக்கம் கடவுள் நம்பிக்கையும் சமூக சேவை ஈடுபாடும் கொண்டவராக வாழ்ந்து வருகின்றார்.

**"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"**

என்ற வள்ளுவனின் குறளுக்கமைய இவரதுபேரனார் வீட்டிற்கு வருபவரை விருந்தோம்பல் செய்வதுடன் சிவலிங்க வழிபாட்டிலும் ஈடுபட்டு வந்தார். இவ் அடியொற்றி இம்மலரின் கதாநாயகனும் விருந்தோம்பல் மட்டுமன்றி யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலயத்தின் நிர்வாகத்துடன் மிக நீண்ட காலமாக ஆலயப்பணி செய்துவருகின்றார். அதுமட்டுமன்றி மல்லாவி ஸ்ரீபாலசுப்பிரமணிய ஆலய பரிபாலனசபை, அணிஞ்சியன்குளம் நரசிங்க வைரவர் ஆலய பரிபாலன சபை என்பவற்றில் நானும் இவருடன் இணைந்து இன்றுவரை பணியாற்றி வருவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இவர் தனது திறமையால் மக்களிடையே ஏற்படும் பல பிணக்குகளைச் சுமுகமாகத் தீர்க்கும் ஆளுமை கொண்டவர். 1983ம் ஆண்டில் விசேட சேவை உத்தியோகத்தராக நியமனம் பெற்றுக் கொண்டார். 1987ம் ஆண்டு தொடக்கம் கிராம அலுவலராகக் கடமையாற்றி எமது துணுக்காய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பல கிராமங்களில் தடம் பதித்து மக்களின் மனங்களில் நீங்காத இடம் பிடித்ததுடன் சமூக நலனுக்காகப் பங்காற்றிய பெருமகனாவார். இவரது சேவை மூப்பினைக் கருத்திற் கொண்டு பிரதேச செயலகம் நிர்வாக கிராம அலுவலராக நியமித்ததுடன் சமூக சேவைக்காகப் பல விருதுகளையும் பெற்றுள்ளார். என்பதில் பெருமிதம் கொள்கின்றேன்.

**"மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனை மாட்சித்து ஆயினும் இல்"**

எனும் குறளுக்கமைய இவரது துணைவியாரும் சமயப்பணி ஆத்மீகப் பணிகளில் நம்பிக்கை மிகுந்தவராக வாழ்வது இவரது சேவைக்கு உறுதுணையாக அமைந்ததுடன், பிள்ளைகள் தந்தையரைப்போல் சமூக சேவையில் ஈடுபடக்கூடிய வகையில் உயர் அரச சேவையில் பணியாற்றி வருவதும் இவரது சேவையினை மேலும் சான்றுபகரக் கூடியவகையில் அமைந்துள்ளது.

இவ்வாறான சேவையாளன் பல ஆண்டுகள் தேக ஆரோக்கியத்துடன் வாழ குல தெய்வமான அணிஞ்சியன்குளம் நரசிங்க வைரவரை வேண்டி வாழ்த்துகின்றேன்.

ஆ.சுந்தரமூர்த்தி,
உதவிக்கல்விப் பணிப்பாளர் - முன்பள்ளி,
வலயக்கல்விப் பணிமனை,
துணுக்காய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக சேவையாளனுக்கு வாழ்த்துச் செய்தி...!

வளம் கொழிக்கும் வன்னி மண்ணில் முல்லை மாவட்டத்தின் மேற்கு வானில் மல்லாவியில் தோன்றிய விடிவெள்ளி திரு. சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்கள்.

இவர் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் கால் பதித்து வேலை செய்யாத கிராம அலுவலர் பிரிவுகள் இல்லை என்று கூறலாம். எல்லா மக்கள் மனங்களையும் வென்று சமூக சேவைக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்கியுள்ளார். இவரது சேவையின் மேன்மையால் ஆறு வகையான விருதுகளை பெற்று சாதனைப்படைத்துள்ளார். கிராம சேவகர் சண்முகநாதன் அவர்கள் இல்லாத பொதுஅமைப்புக்கள் இப்பிரதேசங்களில் எதுவும் இல்லை என்று கூறலாம். 18 வகையான சமூக நிறுவனங்களில் முக்கிய உறுப்பினராக இருந்து சேவையாற்றி வழிநடத்திய ஒரு உத்தமருக்கு மணிவிழா நாளில் எமது கல்லூரிச் சமூகம் சார்பாக வாழ்த்தி வரவேற்பதில் மட்டற்ற மகிழ்வடைகின்றோம்.

சேவையின் சிகரமாய் மல்லாவி மண்ணின் மைந்தனாய் நிறைவான பணியில் மகத்தான மணிவிழாக் காணும் நாயகனின வரலாறு எல்லோருக்கும் ஒரு எடுத்துக்காட்டு.

**"தக்கார் தகவிலார் என்பது அவரவர்**
**எச்சத்தால் காணப்படும்"**

என்பதற்கு இணங்க அவர் தன்னலமற்று பிறநலத்தோடு வாழ்ந்ததன் விளைவை தமது பிள்ளைகளோடு சந்தோசமாக அனுபவித்து வருகிறார். இவர் மேலும் பல விருதுகள், உயர்வுகள் பெற்று நீண்ட ஆயுளுடன் வாழ மணிவிழா நாளில் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

திரு.து.யேசுதானந்தர்
அதிபர்
மு/மல்லாவி மத்திய கல்லூரி
தேசிய பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிய சாதனையாளர்...!

இலங்கைத் திருநாட்டின் வடபகுதியில் முல்லையும் மருதமும் நெய்தலும் ஒருங்கே அமைந்த முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகத்தில் நிர்வாக கிராம அலுவலராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் மல்லாவி S.S சண்முகநாதன் எனும் புனை பெயர் கொண்டு அழைக்கப்படும் திரு. சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

அணிஞ்சியன்குளம் கிராமத்தைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட இவர் 01.07.1983 ல் விசேட சேவை அலுவலராகவும் பின்னர் 01.06.1987 இல் கிராம அலுவலராக நியமனம் பெற்று துணுக்காய் பிரதேச செயலகத்தின் 18 கிராம அலுவலர் பிரிவுகளில் சிறப்பாக பணியாற்றியுள்ளார். மேலும் இவர் தேச மானிய, தேச கீர்த்தி, சிவனருட்செல்வன், லங்கா கீர்த்தி, அறநெறிச்சான்றோன் ஆகிய விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுள்ளார். 2016ம் ஆண்டிலிருந்து சமாதான நீதவானாகவும் பணியாற்றி வருவதுடன், துணுக்காய் பிரதேசத்தின் சமயத்தலங்கள் பலவற்றின் தலைவராகவும், செயலாளராகவும், உறுப்பினராகவும் செயற்பட்டு வருவதுடன் கந்தபுராணம் ஓதுதல், திருவெம்பாவை ஓதுதல் போன்ற செயற்பாடுகள் மூலம் சைவ சமயத்திற்கு அரும்பணியாற்றி வருகின்றார். மேலும் சிறந்த அறிவிப்பாளராகவும், அணிஞ்சியன்குளம் கமக்கார அமைப்பிலிருந்து சிறந்த விவசாய நடவடிக்கைகளில் வழிகாட்டியாகவும் ஈடுபட்டு வருகின்றார்.

இவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் மணிவிழா மலர் வெளிவருவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

**திரு. சிவசுப்பிரமணியம் பிரபாகரன்.**
**கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**கமநல சேவைகள் நிலையம்**
**துணுக்காய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதனை இதனால் இவன் முடிப்பனென்றாய்ந்து அதனை அவன்கண் விடல்

மானிடவியல் விருத்தியே ஒரு நாட்டின் அபிவிருத்தியின் பிரதான கூறு. கிராமம், நகரம், நாடு என்று பொதுக்கட்டமைப்பின் கீழ் தேசபரிபாலனம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

அரச நிருவாக இயக்கத்தின் அடிமட்ட நிருவாகம் கிராமங்களிலேயே ஆரம்பிக்கின்றது. வேதகாலத்தில் கிராமினிகள், சுதந்திரத்திற்கு முன்னர் உடையார்கள் சுதந்திர இலங்கையில் விதானையார், கிராமசேவகர், கிராம சேவையாளர், கிராம உத்தியோகத்தர் எனப்பல பெயர்களால் கிராமங்களைப் பரிபாலித்த உத்தியோகத்தர்கள் தற்போது கிராம நிலதாரி எனப் பொதுவாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். சிங்களப்பதமான இதற்கு தமிழ் வியாக்கியானம் செய்பவர்கள் பலவாறு செய்யினும் "கிராம நிலதாரி" என்ற பதமே கிராமத்தைப் பரிபாலிக்கின்ற உத்தியோகத்தருக்குப் பெறுமதியைக் கொடுக்கிறது.

**பொறுப்பும் பணியும்**

கிராமத்தின் எல்லைக்குட்பட்ட மக்கள், இயற்கை வளம், நிலம், ஆகியவற்றை இலங்கைச் சட்டங்களின் அடிப்படையில் பரிபாலனம் செய்தலும், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தலும், பிறப்பு முதல் இறப்பு வரை உறுதிப்படுத்தலும், பத்திரம் வழங்கலும் எனும் வகைப்படுத்தப்படக்கூடிய பொறுப்பு வாய்ந்த ஒரு அரசபணி.

**இதனை இவன் முடிப்பான்**

திருவாளர் சிற்றம்பலம் சண்முகநாதன் 1983 ஆம் ஆண்டு விசேட சேவை அதிகாரியாக (SSO) அரசபணியில் இணைந்து சேவையாற்ற ஆரம்பித்து மக்களிற்காகப் பணிசெய்யும் ஒருவராக நான்கு ஆண்டுகள் பணிநிறைவெய்திய போது 1987இல் கிராமத்தைப் பரிபாலனம் செய்கின்ற பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரியாகத் தனது கடமையினைப் பொறுப்பேற்றுக் கொண்டார். சமூக நோக்கும் முற்போக்கான சிந்தனையும், தேசப்பற்றும் மிக்க மனிதரான சண்முகநாதன் தமிழப் பிரதேசங்களில் நெருக்கடியான சூழல் ஆரம்பித்த போது ஒரு அர்ப்பணிப்பு மிக்க அரச அலுவலராக நெருக்கடிகள், போராட்டங்கள், துன்பங்கள் சூழ்ந்த மக்களுடன் வாழ்ந்து மக்களுக்காகச் சேவையாற்றி, மீள்குடியேற்ற வாசியாகத் தானும் ஊர்திரும்பி மக்களையும் குடியேற்றி மக்கள் குறைதீர்த்து வைக்கும் பணியில் இடையறாது உழைத்து உழைப்பின் சிறப்பாய் துணுக்காய் பிரதேச செயலக நிருவாக கிராம அலுவலராய் உயர்ந்து நிற்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதனை அவன்கண்விடல்**

மல்லாவியின் கண் அணிஞ்சியன்குளம் கிராமம் இங்கு பிறந்த சண்முகநாதன் தந்தையின் வழிகாட்டலில் தானுமுயர்ந்து தன் சமூகத்தையும் உயர்த்தப் பாடுபடுபவர்.

வேதனத்துக்காக வேலை செய்துவிட்டுப் போகும் பலருக்கு இவர் ஓர் எடுத்துக் காட்டு. எப்போதும் புன்னகை, சீற்றமில்லாப் போக்கு எதையுந் தேடிச்சென்று பொறுப்பேற்று விருப்புடன் முடிக்கும் பாங்கு இவரது சிறப்புக்கள். பொறுப்பும் நெருக்கடிகளும் உள்ள தொழிலாக இருந்த போதும் எப்போதும் புன்னகையும் அமைதியும் மாறாத மனிதராகவே பணிசெய்வார். விருப்புடனும் கலை நயத்துடனும் கடமையைச் செய்பவராகையால் என்றும் இளமையாய் உலாவுகிறார். காலவயது அறுபது ஆனபோதும் உளமும், கோலமும் என்றும் இருபதாகவேயுள்ளது.

சலிக்காது சேவை செய்யும் மனிதர் என்பதால் இவரிடம் பல பொறுப்புக்கள் சமூகத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தனது கிராமத்தையும் தாண்டி பிரதேசத் தின் பல பொறுப்புக்களை இவர் ஏற்று நிறைவேற்றுகிறார்.

கிராம அபிவிருத்திச்சங்கம், ஆலய பரிபாலன சபைகள், லயன்ஸ் கழகம், மாவட்ட சமாதான நீதவான் சங்க இணைப்பாளர், வடமாகாண சற்சங்கத் தலைவர், துணுக்காய் பிரதேச கலாசாரப்பேரவை உறுப்பினர் என்பன அவரது பொறுப்புக்களில் சில இவ்வாறு பதினெட்டிற்கும் மேற்பட்ட பொதுப்பணிகளை ஒரே நேரத்தில் ஆற்றுகின்றார். இது இவரது தனிமனித ஆளுமைக்கும், தன்னிகரற்ற சேவைக்கும் அங்கீகாரமும் சான்றுமாக அமைந்துள்ளது.

**நிலையான கலை ஞானம்**

சமயப்பற்றும், தாய்மொழிப்பற்றும் ஒரு மனிதனை முழுமையடையச் செய்யும் என்பதை இவர் மெய்ப்பித்தவர் "மல்லாவி S.S சண்" எனும் புனைபெயரில் இலக்கிய உலகில் தன்னைப் பதிவு செய்தவர். ஆலய உற்சவங்களில் சிறந்த வர்ணனையாளன், நிகழ்வு மேடைகளில் தலைவர், தொகுப்பாளர், அறிவிப்பாளர், கந்தபுராணம், திருவெம்பாவை ஓதுவார், கூட்டுப்பிரார்த்தனைக் காரர், ஆன்மீக சொற்பொழிவாளன் இப்படிப் பல பாத்திரங்களில் சமூக இயங்கியலை நெறிப்படுத்தும் உன்னத மனிதராக ஒரு கலைஞனாக சண்முகநாதன் திகழ்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சேவைக்கு மதிப்பு**

பாராட்டு, ஊக்குவிப்பு குழந்தைகளுக்கு மட்டுமல்ல வாழுகின்ற எல்லோருக்குமே கிடைக்கவேண்டிய ஒன்று மெச்சத்தக்க சிறுசிறு செயல்களுக்கெல்லாம் பாராட்டு கிடைக்கின்ற போது மேலும் ஒரு படி உற்சாகத்துடன் செயற்பட வழி ஏற்படும். தமிழ் சமூகத்தில் இதற்கான தாராள தன்மை அரிதாகவே உள்ளது. இருக்கும் போது மதிக்காது இறந்த பின் துண்டுப்பிரசுரம் கொடுப்பதையே பெருமையாக இன்றும் கடைப்பிடிக்கிறோம். இது இவ்வாறிருக்க அதையும் தாண்டி இலங்கை மனித உரிமைகள் அமைப்பு 2017 "தேசமானிய", 2018 "தேசகீர்த்தி", விருதுகள் 2017 இலங்கைக்கான உலக சைவத் திருச்சபை "சிவனருட் செல்வன்"- விருது

2018 விஸ்வம் பல்கலைக்கழகம் மட்டக்களப்பு "லங்கா கீர்த்தி"

2016 சமாதான நீதவான்

ஆகிய விருதுகளையும் பட்டங்களையும் தனதாக்கிக் கொண்டார்.

**தோன்றிற் புகழொடு தோன்றுக**

தன்னால் தன் பிள்ளைகளால் சமூகத்தில் உயர்ந்து நிற்கும் சண்முகநாதன் ஒரு அரச சேவையாளனாய் 03 / 01 / 2019 அன்று அறுபது வயதில் சேவை ஓய்வு பெறுகின்றார். அரச சேவை அவரது பணிகளில் நிறைவான ஒன்றாக முற்றி முற்றுப் பெற்று அவருக்கு விடைகொடுக்கும் நாளில் அவரது சமூகம் அவருக்கு மணிவிழா எடுக்கிறது. அறுபதில் கண்ட எல்லோரும் மணிவிழா கண் டதில்லை. மணிவழா இவரது சேவைக்குப் பெருவிழா மனம் சோர்வின்றி மக்கள் சேவை சுதந்திரமாய் செய்து எய்கள் சமூகத்தை காக்கும் பணியை சேமமாய் ஆற்றுக சண்முகநாதன் ஐயா.

**மெச்சுதற்குந்துதல்**

என்னிலும் பதினைந்து அகவை கூடியவர் திருவாளர் சி. சண்முகநாதன் முல்லை மாவட்டத்தில் மத்தியில் நானும், கிழக்கில் அவரும் இருந்தாலும் கலைப் பள்ளியில் ஒன்றாய் பல இடங்களில் கூடியிருக்கிறோம். எப்போதும் எனது பேச்சை நச்சுபவர். பாராட்டி எனக்கு ஊக்கம் தருபவர். மறைந்த பிரதேசச் செயலர் அமரர் நந்தகுமார் காலத்தில் மாவீரன் பண்டாரவன்னியன் விழா மாவட்ட நிகழ்வில் மல்லாவியில் கூடி நின்றதும், இன்றும் காணுகின்ற போதெல்லாம் புன்னகையுடன் நட்புறவாடுவதும் இவர் மாண்பு. நான் கண்ட மனிதரும் என்றும் நிறைந்தவரானார்.

வாழ்த்த வயதும் வாண்மையும் நிறைந்தில.

வல்ல மனிதர் உம்மை மெச்ச வாய்ப்புக் கிட்டிய மகிழ்வுடன் முற்றும்.

திரு சி. நாகேந்திரராசா

அதிபர்,

மு / முத்தையன்கட்டு வலதுகரை ம.வி,

ஒட்டுசுட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனை மனமுவந்து வாழ்த்துகின்றேன்....!

திரு.சிற்றம்பலம் சண்முகநாதன்
அணிஞ்சியங்குளம் யோகபுரம்

அகவை 60 நிறைவோடு 03.01.2019 இல் மணிவிழாக்காணும் எங்கள் கிராமத்தின் சமூக சேவையாளனை மனநிறைவோடு வாழ்த்துகின்றேன். 03.01.1959 இல் அவதரித்த இவர் அரசாங்க சேவையின் விசேட சேவை உத்தியோகத்தராக 01.07.1983 இல் இணைந்தார். அன்று முதல் இன்று வரை தமது சேவையினால் இந்த மண்ணின் பெருமையை நிலை நிறுத்துவதில் அயராது பாடுபட்டு வரும் சேவையாளராகத் திகழ்கின்றார். இச் சேவையினை வியந்து இவருக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணையகம் தேசமானிய, தேசகீர்த்தி ஆகிய விருதுகளை வழங்கிக் கௌரவித்தது. உலக சைவ திருச் சபையானது "சிவனருள் செல்வர்""அறநெறி சான்றோன்" ஆகிய விருதுகளை வழங்கிக் கௌரவித்தது. விஸ்வம் பல்கலைக் கழகத்தின் "லங்கா கீர்த்தி" எனும் விருதும் இவருக்குக் கிடைத்தது.

தற்போது பிரதேச செயலகம், துணுக்காயில் நிர்வாகக் கிராம அலுவலராகக் கடமையாற்றி வருகின்ற இவர் சிறந்த சமூகத் தொண்டனாகவும் திகழ்கின்றார். துணுக்காய்ப் பிரதேச இந்து மகா சபையின் உபதலைவராகவும்இ விநாயகர் சனசமுக நிலையத் (அணிஞ்சியன்குளம்) தலைவராகவும் விளங்கும் இவர் ஆலய நிகழ்வுகளில் தனது பங்களிப்பினை வழங்குகின்ற சமய சமூகத் தொண்டராகவும் விளங்குகின்றார். ஆலயங்களிலே கூட்டுப் பிராத்தனை, பிரசங்கம் போன்றவற்றையும் நிகழ்த்தி தமது சிந்தனையை எந்நேரமும் பொதுப்பணிகளில் ஈடுபடுத்தும் அருந்தொண்டனாகவும் விளங்குகின்றார்.

இடம் பெயர்ந்த காலங்களில் மக்களோடு மக்களாக சேர்ந்து எமது பகுதி மக்களுக்காக அவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக உன்னதமாகப் பாடுபட்டு செயற்பட்ட சமய சமூக ஆர்வலரான மணிவிழா நாயகன் திரு.சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்கட்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**வாழ்த்துபவர்**
**திரு.கு.ஜெகதீஸ்வரன்**
**அதிபர்**
**மு/யோகபுரம்.ம.வி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**விருது பெறுகின்றார் நாயகன்...**




**மணிவிழா நாயகனின் குடும்பம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூகப் பணி-சமயப்பணிகளில் தடம் பதித்தவர்...!

அன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய நிர்வாக கிராம அலுவலர் சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களுக்கு மணிவிழா எடுப்பதை அறியும் போது எம்மனம் பேரானந்தம் அடைகின்றது. தமிழையும் தமிழ் மண்ணையும் நேசிக்கும் சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களுக்கு எடுக்கும் மணிவிழா அவருக் குரியதல்ல உண்மையில் அது தமிழிற்கு எடுக்கும் விழா. முத்தமிழையும் சமயத்தையும் வளர்த்த நம் ஊர் அறிவாளர்களில் கிராம அலுவலர் சண்முகநாதன் வித்தியாசமானவர். பெருமிதமின்றி எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகுபவர். தேவையென வருவோருக்கு சேவையென அள்ளி வழங்குபவர். அவரின் எளிமையான அரும் பெரும் குணத்தை எண்ணும் போது நெஞ்சம் இனிக்கின்றது.

தமிழ்ப்பண்பாடு பாரம்பரியங்களை வெறுமனே உதட்டளவில் நிறுத்தாது நடைமுறையில் வாழ்ந்து காட்டுபவர். அவர் தமிழ்ப்பண்பாடு என்றால் என்ன? அதன் வடிவம் என்ன? தமிழரின் வரவேற்பு உபசாரம் எப்படியிருக்கும்? என்றொரு கேள்வி நம் இன சமூகத்திடம் எழுந்தால் அதற்கு உதாரணமாகக் காட்டக்கூடிய ஒருவர் நம் ஊரில் இருப்பாராயின் அவர் நிர்வாகக் கிராம அலுவலர் சண்முகநாதனாகவே இருக்கமுடியும். அத்தகைய பெருமையுடையவருக்கு மணிவிழா எடுப்பதன் மூலம் மணிவிழா என்ற சொற்பதமே பெருமையடைகின்றது.

சகல மட்டத்தினருடனும் நெருங்கிப் பழகும் முறை தனித்துவமானது. எடுத்த காரியத்தைத் திறம்படச் செய்து முடிப்பதில் இவர் ஒரு செயல் வீரன். துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் அனைத்துக் கிராமங்களிற்கும் இவரது சேவைக்கிட்டியிருந்தது அம்மக்கள் பெற்ற பெரும் பேறாகும். இவர் தம் சேவையைக் கௌரவித்து, 2016 இல் சமாதான நீதவான், 2017 இல் இலங்கை மனித உரிமை அமைப்பு தேசமானிய விருது, உலக சைவத் திருச்சபை- இலங்கை சிவனருட் செல்வர், 2018 இல் இலங்கை மனித உரிமை அமைப்பு தேசகீர்த்தி விருது விஸ்வம் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு லங்கா கீர்த்தி விருது உலக சைவத் திருச்சபை, இலங்கை அறநெறி சான்றோர் விருதுகள் இவரை நாடி வந்தவை. மேலும் இலங்கையில் உள்ள கிராம அலுவலர்களுள் மூப்பு, திறமை, சேவை அடிப்படையில் தெரிவாகிய 25 பேர் அடங்கிய குழுவில் இடம்பெற்று இந்தியாவிற்கு சுற்றுலா சென்று மன நிறைவுடன் வாழும் சொந்தக்காரருக்கு எடுக்கப்படும் மணிவிழாவிற்கு வாழ்த்துக்கூறுவதில் யான் பெருமகிழ்வடைகின்றேன்.

அறுபது வயதில் இன்று
அனுபவ முதிர்ச்சி கொண்டு
விசேட சேவை உத்தியோகத்தராக
பணி தொடர்ந்து பின் கிராம அலுவலராக இன்று
நிர்வாக கிராம அலுவலராய்
தரம் உயர்ந்து பணி செய்த
மணி விழா நாயகனே
வாழ்க வாழ்க நீடூழி வாழ்க

ஆர்.ஆர்.நிக்ஷன்
அதிபர்
மு/கல்விளான்குளம் ம.வி
துணுக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகன் திரு.சி.சண்முகநாதனைப் பற்றிச் சில வரிகள்

நிர்வாக கிராம அலுவலர் திரு.சி.சண்முகநாதன் 03.01.2019ல் ஓய்வு பெறுகிறார். துணுக்காய் செயலாளர் பிரிவு மக்கள் அவர் சேவையைப் பாராட்டி மணிவிழா எடுக்கிறார்கள் என்ற செய்தி கிடைத்தது. சண்முகநாதனுக்கு அறுபது வயதா? என்னால் நம்ப முடியவில்லை. என்னுடைய நினைவலைகள் பின்னோக்கி செல்கின்றன. மு/யோகபுரம் மகாவித்தியாலய வகுப்பறைகளை என் நினைவு மீட்டுப்பார்க்கின்றது. வகுப்பில் ஆசிரியர்கள் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அமைதியாகவும் மற்றைய மாணவர்களுக்கு வழிகாட் டியாகவும் இருந்து பாட வேலைகளைச் செய்கின்ற காட்சி என் மனத்திரையில் ஓடுகிறது. மாணவ பருவத்தில் அவர் பாடசாலையில் எல்லா ஆசிரியர்களுடைய அன்பிற்கும் மதிப்பிற்கும் ஆளானவர். சிறுவயதிலிருந்து க.பொ.த வரை என் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய மாணவனாக இருந்த அவருடைய வளர்ச்சிப் படிகளில் அவரின் ஆசிரியையாக இருந்த எனக்கும் கணிசமான பங்குண்டு என்று சொல்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

தமிழ்ப்பண்பாடு மிக்க அனிஞ்சியன் குளத்தில் சிற்றம்பலம் வள்ளியம்மை தம்பதிகளின் செல்வப் புதல்வனாக 03.01.1959 ல் சண்முகநாதன் பிறந்தார். அணிஞ்சியன்குளம் ஸ்ரீசித்தி விநாயகர் கோயிலுக்கு அண்மையில் இவர்களின் வீடு உள்ளதால் குழந்தைப் பருவத்தில் இருந்தே விநாயகர் வழிபாட்டில் சிறந்து விளங்கினார். இன்று இவர் தன் பதவி நிலைகளில் உயர்ந்து விளங்கக் காரணமாக இருந்தது அந்த விநாயகப் பெருமான் அருள் என்றே நான் கூறுவேன்.

இனி சண்முகநாதனின் பதவிக்காலத்திற்கு வருகின்றேன். படிப்பு முடிந்து வேலை தேடும் படலம் ஆரம்பமானது. 1983 ம் ஆண்டு துணுக்காய செயலாளர் பிரிவில் உள்ள உயிலங்குளம் விசேட சேவை உத்தியோகத்தராகப் பதவியேற்றார். மிகவும் பின்தங்கிய கிராமமான உயிலங்குளம் அபிவிருத்தி அடைய தன்னாலான சேவையைச் செய்தார். பின்பு 1987 முதல் கிராம அலுவலர் பதவியேற்றர். அவருடைய சேவைக் காலத்தில் துணுக்காய்ப் பிரிவில் 18 கிராம அலுவலர் பிரிவுகளில் சேவை செய்து, தான் சேவை செய்த இடங்களைச் செம்மைப்படுத்திய பெருமை உடையவர்.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களையும் நண்பன்"

ஆகவே திரு சண்முகநாதன் கடமையாற்றினார். தான் கடமையாற்றிய கிராமத்து மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து, இயலுமான உதவிகள் செய்து, பரந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மை உடைய ஒரு சமூக சேவகனாக எல்லோராலும் மதிக்கப்பட்டார்.

"காட்சிக்கு நல்லன் கடுஞ் சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் உலகு"

என்ற வள்ளுவர் வாக்கின் படி தன்னிடம் உதவி கேட்டு வருபவர்கள் எந்த நேரத்திலும் தயக்கமின்றி அணுகக்கூடிய ஒரு சேவையாளன். உதவி கேட்டு வருபவர்களுக்குக் கை கொடுத்து சக உத்தியோகத்தரோடு நட்புரிமை பூண்டு, மேலதிகாரிகளுக்கு மதிப்புக் கொடுத்து "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற பெருமனங் கொண்ட இவரின் சேவைகளால் எல்லோர் மனதிலும் நீங்காத இடம் பிடித்தவர். அவருடைய தன்னலமற்ற சேவை, சமூகத்தில் மதிப்பையும், பதவி நிலையில் உயர்வையும் தந்து நிற்கின்றது.

1983ம் ஆண்டு இவர் விசேட சேவை அலுவலராகப் பதவி ஏற்ற காலம் தொடங்கி ஆதரவற்ற மக்களுக்குச் சேவை செய்வதையே தன் கடமையாகக் கொண்டு செயற்பட்டார். 1983ம் ஆண்டு ஆடிக்கலவரத்தில் எமது உறவுகள் தென்னிலங்கையில் இருந்து எல்லாம் இழந்து வந்த போது அவர்களை ஆதரிக்க முன்வந்து உழைத்தவர். பின் இந்திய இலங்கை இராணுவத்தினரின் நடவடிக்கையின் போது ஆதரவற்றவர்களாக்கப்பட்டவர்களைத் தமிழர் புனர் வாழ்வுக் கழகம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இவற்றின் உதவிகளை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதிலும், அந்த நிறுவனங்களோடு இணைந்து தானும் பணி புரிந்ததையும் வன்னி மக்கள் என்றும் மறக்க மாட்டார் கள். போர்க்காலச் சூழலின் போது பயணத்தடை, உணவு, மருந்து ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காத போது செஞ்சிலுவை சங்கம், சர்வதேச செஞ்சிலுவை சங்கம், போறூட் போன்ற நிறுவனங்களின் உதவிகள் சரியான முறையில் மக்களைச் சென்றடைய பிரதேச செயலர், ஏனைய அரச அதிகாரிகளோடு இணைந்து செயற்பட்டவர். இந்தக் காலகட்டத்தில் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் நலன் புரிசங்கத்தின் செயலாளராக இருந்து இரவு பகல் நோயாளர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய முன்னின்று உழைத் தவர். வெள்ள அழிவுகளின் போது பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று உடனடி நிவாரணம் வழங்க முன்நின்று உழைத்தவர்.

துணுக்காய் பிரிவில் நடைபெறும் எந்த நிகழ்விலும் திரு. சண்முகநாதனின் பிரசன்னம் இருக்கவே செய்யும். திருமண விழா, மரணச்சடங்கு நடக்கும் வீடுகளில் தானும் அந்தக் குடும்பத்து உறவினனாகக் கலந்து கொள்ளும் மனப்பான்மை கொண்டவர். ஆதரவற்ற அநாதைப் பிணங்களை அடக்கம் செய்ய முன்னின்று உழைத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிப் பெருநில மக்களின் வாழ்வையும் வளத்தையும் அழித்த போர் அரக்கனின் பிடியில் மக்கள் சிக்கித் தவித்த போது வெடிச்சத்தம், செல்வீச்சு, இராணுவ நடமாட்டம் இவற்றின் மத்தியில் மக்கள் சேவகனாக வன்னிக் காடெங்கும் மக்களைத் தேடித் தேடித் தனது பணியை 24 மணி நேரமும் செய்த சேவகன், போர்க் காலச் சூழலில் இவர் செய்த சேவையை வன்னி மக்கள் என்றுமே மறக்க மாட்டார்கள்.

துணுக்காய்ப் பிரிவிலுள்ள பல ஆலயங்களில் பரிபாலன சபைகளின் தலைவர், செயலாளர் பதவிகளிலும், உறுப்பினராகவும் இருந்து செயற்படுகிறார். புராண படனம், திருமுறை, திருவாசகம் ஓதுதல் கூட்டுப்பிரார்த்தனை கோயில் திருவிழாக் களின் போது நேர்முக வர்ணனை செய்தல், என்பன இவர் ஆன்மீக வளர்ச்சிக்குச் செய்யும் சிறந்த செயற்பாடுகளாகும். துணுக்காய் பிரதேச இந்து மகாசபை உபதலைவராகவும், வடமாகாண சற்சங்கத் தலைவராக உள்ளார். துணுக்காய் பிரதேசத்தில் பல அறநெறிப் பாடசாலைகள் செயற்பட முன்னின்று உழைப்பவர். இவருடைய சேவையைப் பாராட்டி உலக சைவத் திருச்சபை 2017ம் ஆண்டு "சிவனருட்செல்வர்"என்ற பட்டத்தை வழங்கியுள்ளது.இலங்கை மனித உரிமைகள் அமைப்பால் 2017ல் தேசமானிய விருதும், 2018ல் தேசகீர்த்தி விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டவர். 2016ல் சமாதான நீதவான் ஆனார்.

தமிழ்ப் பண்பாடு, கம்பீரமான நடை, சிரித்த முகம், பண்பான பேச்சு, கடமை உணர்வு, சேவை மனப்பான்மை, என்பன இவரது சிறப்பியல்புகளாகும். நாட்டுப் பற்று, தமிழ்ப்பற்று, ஆன்மீகப்பற்றுக் கொண்ட இவர் தன் சேவைக் காலத்தில் தன் சக அதிகாரிகள், மேலதிகாரிகள், மக்கள் எல்லோரிடமும் அன்பாகப் பேசி தன் கடமைகளைத் திறமையுடன் நிறைவு செய்ததைப் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். சண்முகநாதனின் அறிவுத்திறனையும் சேவை செய்யும் தன்மையையும் பக்கம் பக்கமாக இன்னும் எழுதலாம். நல்லதொரு தமிழ்ச் சமுதாயம் உருவாக வேண்டும் என்றவேணவாவோடு வேலை செய்த இவர் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் பல்வேறு பொது நிறுவனங்களின் ஊடாக வன்னி மண்ணுக்கே குறிப்பாக துணுக்காய் செயலாளர் பிரிவிற்குத் தொடர்ந்து சேவையாற்ற வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

03.01.2019 நடைபெறும் இவருடைய மணிவிழா சிறக்க என்னுடைய வாழ்த்துக்கள். அவருடைய வாழ்வு சிறக்க, அவருடைய பணிகள் மென்மேலும் தொடர, நல்ல தேக ஆரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும், அளிக்க எல்லாம் வல்ல அணிஞ்சியன் குளம் ஸ்ரீசித்தி விநாயகப் பெருமானின் அருளாசியை வேண்டுகிறேன். மேலும் இவர் தன் குடும்பத்தோடு இன்று போல் என்றும் சீரும் சிறப்பும் பெற்று மங்களமாய் பல்லாண்டு வாழ வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

திருமதி புவனேஸ்வரி நடராசா
ஓய்வு நிலை அதிபர்,
பாரதிநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி விருதுடன் விழா நாயகன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச லயன்ஸ் கழகம் – வரணி
THE INTERNATIONAL ASSOCIATION OF LIONS CLUBS
DISTRICT 306B1 - SRILANKA

Hot line:- 0777110331
Viber/ whatsapp:- 0770413220
E-Mail:- lionjeyasanhar@gmail.com

கௌரவத் தலைவர்: வரணியூர்
தேசமானிய தேசபந்து
லயன் – ஜெயசங்கர் MAF, LLB (J.P)
அகில இலங்கை சமாதான நீதவான்
ஆன்மீகப் பிரச்சாரகர், எழுத்தாளர்
குருக்கள் குடியிருப்பு, வரணி

Date:.....................

# மணி விழா நாயகனை மனதார வாழ்த்துகின்றேன்...

"தோன்றிற் புகழொடு தோன்றுக
அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு இணங்க இயற்கை எழில் கொஞ்சும் முல்லைத்தீவு அமைந்துள்ள அணிஞ்சியன்குளம், யோகபுரம் எனுமிடத்தில் 03.01.1959இல் பிறந்து பல சமூக சேவைக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவைநாயகனாக மணி விழா காணும் சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களுக்கு சேவைநலன் பாராட்டி வாழ்த்துக்களை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். திருவாளர் சி.சண்முகநாதன் அவர்கள் 01.07.1983ம் ஆண்டில் விசேட சேவை உத்தியோகத்தராக அரச சேவையில் இணைந்து பின்னர் 01.06.1987 காலப்பகுதியில் இருந்து கிராம அலுவலராக கடமையாற்றி பின்பு 01.10.2017இல் இருந்து பிரதேச செயலகம் துணுக்காயில் தனது தொடர்ச்சியான சேவையினைத் தொடர்ந்தார். அரச சேவையுடன் மட்டுமல்லாது பொது நிறுவனங்களின் ஊடாக சமூகசேவை, ஆன்மீக செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றவர். அதற்காக மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பினால் தேசமானிய தேசகீர்த்தி விருதுகளையும், இலங்கை சமாதான நீதவான்கள் அமைப்பின் 25வது ஆண்டு விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருதினையும் பெற்றுக் கொண்டுள்ளதுடன், சமாதான நீதவான் சங்கத் தலைவரின் விசேட பாராட்டைப் பெற்றவர். அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட சமாதான நீதவான்கள் சங்கத்தின் இணைப்பாளராகவும் இருந்து சமாதான நீதவான்களின் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் தன்னலம் கருதாது சேவையாற்றுகின்றார்.

மேலும் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் வரணிகிளையின் உபதலைவராக இருந்து ஏழை மக்களுக்கு, மூக்கு கண்ணாடி வழங்குதல் மற்றும் இலவச மருத்துவ பரிசோதனை, பாடசாலைப் பிள்ளைகளுக்கான புத்தகப்பை, கொப்பிகள் வழங்குதல் மரநடுகைக்காக மரங்கள் வழங்குதல் போன்ற சேவைகளையும் செய்து வருகின்றார். அத்துடன் உலக சைவத்திருச்சபையின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளராக இருந்து இந்து சைவசமயத்தவருக்கு தீட்சை வழங்குதல், மற்றும் ஆலயங்களில் சமய சொற்பொழிவுகளையும் ஆன்மீக பணியையும் செய்துவருகின்றார். அரச வேலையில் இருந்து ஓய்வுபெற்றுள்ளாரே தவிர ஆனால் மக்கள் சேவையில் இருந்து ஓய்வுபெறவில்லை. எனவே மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற வாக்கிற்கிணங்க தொடர்ந்தும் இவர் மக்களுக்கு சேவையாற்றுவார்! சேவையாற்ற வேண்டும்! இதனால் இனிவரும் காலங்களில் மக்களுக்கான தலைவராகத் திகழ்வார் என்பதில் ஐயமில்லை. எனவே இவரின் மக்கள் பணி தொடர சர்வதேச லயன்ஸ் கழகத்தின் சார்பாக வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்றும் மக்கள் சேவையிலுள்ள,
லயன் ஜெயசங்கர்
யாழ் மாவட்ட இணைப்பாளர்,
இலங்கை சமாதான நீதவான் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவையிற் சிறந்த மணிவிழா நாயகன்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் நீண்ட காலமாக சேவையாற்றி மணிவிழாக்காணும் திரு. சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களது மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

விசேட சேவை உத்தியோகத்தராகவும், கிராம அலுவலராகவும் நிர்வாக கிராம அலுவலராகவும் பதவிகள் வகித்து 35 வருடங்களில் துணுக்காய் பிரதேச மக்களுக்கு செறிவான சேவையினை வழங்கியுள்ளார்.

இவர் சேவை தொடங்கிய காலத்திலிருந்து பல கஸ்டங்களுக்கு மத்தியில், வசதிகள் ஏதுமற்ற நிலையில் தான் சேவையாற்றியுள்ளார். "வீட்டிலிருந்து வேலைக்கென்று புறப்பட்டால், மீண்டும் வீடு வந்து சேர்ந்த பிறகு தான் ஆளைப் பற்றிய தகவல் தெரியும் வீட்டுக்காரருக்கு" அப்படியான சூழலில் தான் இவரது சேவை உணர்வு பூர்வமாக நடைபெற்றது. மக்களின் தேவைகள் தங்கு தடங்கலின்றிப் பூர்த்தி செய்யப்பட்டுக் கொண்டிருந்தன.

திரு. சண்முகநாதன் அவர்கள் அரச சேவை மட்டுமன்றி பொதுச் சேவைகள், கோயிற் தொண்டுகள், விழாக்கள், பூசைகள் பொறுப்புடன் நடத்துவதில் மிகவும் அக்கறையுள்ளவர். அதுமட்டுமன்றி உறவுகள், நண்பர்களின் வீடுகளில் என்ன நிகழ்வு நடந்தாலும் முன்னின்று உதவி செய்வதில் நிகரற்றவர் என்றே கூறலாம். தன் கிராமத்துக்காகவும் பணி செய்தவர். அனைவரிடமும் அன்புடனும், பண்புடனும் நடந்து கொள்வார். எமது பண்பாட்டைப் பேணக்கூடிய வகையில் நடந்துகொள்வதுடன், அனைவரும் பண்பாட்டைப் பேணி நடக்க வேண்டுமெனக் கூறிக்கொள்வார்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்"

எனும் வள்ளுவர் வாக்கிற்கு இணங்க, இவரது ஓய்வு காலத்தில் தன் குடும்பத் தாருடன் சந்தோசமாக இருந்து, முடிந்த பணிகளைச் செய்வதற்கு இறையருள் கிட்டவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

திருமதி புவனேஸ்வரி சிவபாலன்
ஓய்வுநிலை விவசாயப் போதனாசிரியர்,
பிரதேச சபை உறுப்பினர்,
துணுக்காய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதனைகளின் முன்னோடி...!

திரு சிற்றம்பலம் சண்முகநாதன் (நிர்வாக கிராம அலுவலர்)அவர்கள் 2019/01/03 அன்று சேவையில் இருந்து ஓய்வு பெறும் இவ் வேளையில் அவருடன் 1964 - 1976 ஆண்டு காலப்பகுதியில் மு/யோகபுரம் மகா வித்தியாலயத்தில் ஒன்றாக கல்வி கற்றவன் என்ற வகையிலும இன்று வரை அவருடன் ஒரே கிராமத்தில வசித்து வருபவன் என்ற வகையிலும் சில விடயங்களைப் பகிர்ந்து கொள்கிறேன்

வன்னிப் பெரு நிலப்பரப்பிலே உள்ள பழம் பெரும் கிராமங்களில் அனிஞ்சியன் குளமும் ஒன்றாகும். முல்லை நிலமும் மருத நிலமும் ஒருங்கே அமையப்பெற்ற எழில் நிறைந்த கிராமம் அக் கிராமத்தில் நடு நாயகமாக உயர் திரு சிற்றம்பலம் ஐயாவின் குடும்பம் வாழ்ந்து வந்தது முற்றிலும் வன்னிக்கே உரித்தான வாழ்க்கைமுறை பண்பாடு இறைபக்தி என்பன அமையப் பெற்ற நேர்மையான கண்ணியமான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். இவரது கடைக்குட்டிசிங்கம் திரு.சண்முகநாதன் அவர்கள் பாடசாலைக் கல்வியோடு விவசாய நடவடிக்கைகள் கால்நடை வளர்ப்பு விளையாட்டு பொதுப்பணி என பல துறைகளில் முன்னணி வகித்தார். பாடசாலை விளையாட்டுப் போட்டியில் ஓட்ட நிகழ்வுகளில் அவருக்குத்தான் முதலிடம் பாடசாலை நிகழ்வுகளில் தலைமை தாங்கும் பண்பு பேச்சுத்திறன் போன்றன சிறப்பாக இருந்தது. கல்வியளவிலும் சிறப்பாகத் துலங்கினார். பொதுப்பரீட்சையில் சித்தி பெற்று இவர் விசேட சேவை உத்தியோகத்தராக பின்னர் கிராம அலுவலராக நியமனம் பெற்று துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பல கிராமங்களில் சேவையாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒருவர்.

சேவைக் காலத்தில் பொதுப்பணி ஆலயப்பணிகளில் முன்னின்று செயலாற்றுபவர். இவர் பங்குபற்றாத ஆலய விழாக்களே இல்லை எனலாம் இவரது துணைவியார் சிறந்த கணித விஞ்ஞான ஆசிரியை அமைதியான போக்கும் ஆளுமையும் உடையவர். மக்கள் இருவர், ஒருவர் வைத்தியராகவும் மற்றையவர் பட்டதாரியாகவும் கல்வி உலகத்திலே உயர் நிலை அடைந்து அவரது குடும்பத்திற்கும் கிராமத்திற்கும் பெருமை சேர்ததுள்ளனர். அவரது சேவைக்காலததில் குடும்ப வாழ்க்கையிலும் பொதுவாழ்கையிலும் பெரும்பாலும் முழுமை பெற்ற ஒருவராக செயற்பட்டு சேவையில் இருந்து ஓய்வு பெறுவது சிறப்பு அம்சமாகும். இவரது ஓய்வுக் காலத்தில் மேலும் சமூக சேவைகள் செய்து ஓய்வுக் காலம் சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.த.அருமைநாயகம்
ஓய்வு நிலை அதிபர்,
மு/பாண்டியங்குளம். ம.வி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகிறோம்...

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற உயரிய கொள்கையுடன் நான்கு தசாப்தங்களாக சமூக சேவையில் ஈடுபட்டு வரும் எம் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய திருவாளர் சிற்றம்பலம் சண்முகநாதன் (நிர்வாகக் கிராம அலுவலர், பிரதேச செயலகம், துணுக்காய்) அவர்கள் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார் என்பது யாராலும் இலகுவில் நம்பிவிட முடியாது ஏனெனில் என்றும் இளமையானது அவரது தோற்றம்.

ஒரு மனிதன் தன் வாழ் நாளில் பல போராட்டங்கள், இன்பதுன்பங்கள், வெற்றி தோல்விகள், விருப்பு வெறுப்புக்கள், பல அனுபவங்கள், இழப்புக்கள், துரோகங்கள் போன்றவற்றைச் சந்தித்தாக வேண்டும் அதுவும் ஒரு அரச திணைக்களத்தில் மக்கள் சேவையில் ஈடுபடும் அலுவலர் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தே தீரவேண்டும். எப்படிப்பட்ட பிரச்சினையாகிலும் தனது புன்சிரிப்பையே பதிலாகத் தந்து பிரச்சினைகளைச் சமாளித்து விடுவார். நாம் அறிந்தவகையில் அவருக்கு எதிரிகள் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

துணுக்காய் பிரதேச செயலகத்தில் 05 கிராம அலுவலர் பிரிவுகள் இருந்த காலத்திலிருந்தே கடமையாற்றியவர். தற்போதுள்ள 20 கிராம அலுவலர் பிரிவுகளிலும் சேவையாற்றிய பெருமையும் பெருமிதமும் திரு சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களையே சாரும்.

அறிவுரைகள் வழங்குவதில் சாதுரியமானவர். இளம் சமுதாயத்தைக் கல்விமான்களாக்க வேண்டுமென்பதில் அயராத முயற்சியுடையவர், ஆன்மீகத்தில் அவரது பணி அளபரியது, சைவம் வளர்த்த ஆன்மீகவாதி, இவரது சமூக சேவைக்குச் சான்றாக பல்வேறுபட்ட அமைப்புக்களில் அங்கம் வகித்துள்ளமை குறிப்பிட்டுக் கொள்ளலாம். ஆலய நிர்வாகம், ஆலய புனருத்தாரணப்பணிகள், கும்பாபிஷேகத் திருவிழாக்களில் முழுமூச்சுடன் முன்னின்று செயற்பட்டவர்.

இது மட்டுமல்ல பல சிறப்புப்பட்டங்கள் கௌரவிப்புக்களைப் பெற்றுக் கொண்டவர். குறிப்பாகச் சிவனருட் செல்வர், சமூக சேவையாளர், சமாதான நீதவான், என்று பலவற்றைக் குறிப்பிடலாம்.

லயன்ஸ் கழகத்தில் அங்கம் வகித்துக் கொண்டிருப்பவர். " ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" ஏழைகளுக்கு உதவுவதில் அதீத ஈடுபாடு உடையவர் அவரது சமூக சேவையில் இவர் திருப்திப்பட்டுக் கொள்ளவில்லை என்றே கருதத் தோன்றுகிறது. ஏனெனில் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுவதை அவரது மனம் ஏற்றுக் கொள்ளவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிற்கு மேலதிகமாக அறிவிப்புத் துறையில் அதிக ஆர்வமுடையவர். நிகழ்வுகளில் அறிவிப்பாளராக செயற்படுதல், விழாக்களில் நேர்முக வர்ணணை என்பவற்றை மிக மிக விருப்புடன் செய்து முடிப்பார்.

துணுக்காய் பிரதேச எல்லைக்குட்பட்ட அனைத்துக் கிராம மக்களையும் நன்கறிந்தவர் அத்துடன் அனைத்து ஆலயத் திருவிழாக்களிலும் இவரைக் காணமுடியும். தனது ஆரம்பகால கிராம அலுவலர் வாழ்க்கைமுறை இடப்பெயர்வு கால நிவாரண விநியோகங்கள் என்பவற்றைப் பெருமிதத்துடன் பகிர்ந்து கொள்வார்.

பாடல்களை இசையுடன், இரசனையுடன் பாடுவதில் ஈடுபாடு கொண்டவர். பஜனைகள் அரங்கேற்றுவார்.

"பாவாடை தாவணியில்
பார்த்த உருவமா"
"ஊரார் உறங்கையிலே
உற்றாரும் தூங்கயிலே"

இவ்விரண்டு பாடல்களுமே அவருக்கு நன்கு விருப்பமானவை. எமது பிரதேச செயலகத்தில் நடைபெறும் எந்த விழாவிலும் அவரது பாடல் அங்கத்துவம் பெறாமல் நிறைவு பெறாது.

அத்துடன் எமது துணுக்காயின் MGR என நாம் செல்லமாக அழைப்போம். இன்றைய தினம் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் திரு சிற்றம்பலம் சண்முகநாதன் ஐயா அவர்கள் சந்தோசமாகவும், மனநிம்மதியுடனும் தனது ஓய்வுக்காலத்தைக் கொண்டுசெல்ல வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

கிராம அலுவலர்கள்,
பிரதேச செயலகம்,
துணுக்காய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை...

துணுக்காய்ப் பிரதேச செயலகப் பிரிவில் நீண்ட காலமாக கிராம அலுவலராக அரும்பணியாற்றி மணிவிழாக்கண்டு ஓய்வு பெறும்இ தொன்மை வாய்ந்த அணிஞ்சியன்குளம் பதி மைந்தன்இ திரு. சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களின் 'மணி விழா' மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

அவருடைய ஆளுமை, வலு, தலைமைத்துவம், அர்ப்பணிப்பு, துணிவு, பொறுமை ஆகிய பண்புகள் அவர் பலவற்றைச் சாதிக்க வழிகோலியது. இளவயதிலேயே கடின உழைப்பாளியாக மட்டுமன்றி சமூக சேவைகளின் பங்காளியாகவும் விளங்கினார். துணுக்காய்ப் பிரதேச அபிவிருத்தியில் மட்டுமன்றி சைவத்திற்கும் தமிழுக்கும் அரும்பணியாற்றியுள்ளார். அணிஞ்சியன் குளம் சித்திவிநாயகர் ஆலயத்திற்கு மட்டுமன்றி யோகபுரநாதர் ஆலய வளர்ச்சியிலும் அரும் பெரும் பணியாற்றியுள்ளமையை நானறிவேன்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் மாபெரும் ஆலயமாக விளங்கும் யோகபுரநாதர் ஆலயத்தின் செயலாளராக இருந்து ஆலய வளர்ச்சிப் படிகளில் பரிபாலன சபை திருப்பணிச் செயற்பாடுகளில் மகா கும்பாபிசேஷ செயற் பாடுகளில் ஆலய அறநெறிப்பாடசாலை வளர்ச்சியில் அவரது பங்களிப்பு அளப்பரியது. வன்னிப் பிரதேச சற்சங்கத் தலைவராகவும் இருந்து ஆன்மீக சிவத் தொண்டில் வலுவாகத் தடம் பதித்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது ஓய்வு காலத்தில் வன்னிப் பிரதேச சிவத் தொண்டு, சமூகத் தொண்டு மேலும் தொடர வேண்டுமெனவும் அவர் சிறந்த ஆரோக்கியமான நல்வாழ்வு குடும்பத்துடன் வாழ வேண்டுமெனவும் யோகபுரநாதரை வேண்டி வாழ்த்துகிறேன்.

திரு. தி. சோதிலிங்கம்
தலைவர்,
ஆலய பரிபாலன சபை,
அருள்மிகு யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலயம்,
மல்லாவி அணிஞ்சியன்குளம் யோகபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீக நாயகன் பற்றிச் சில வரிகள்

எதிர் வரும் 03.01.2019 அன்று மணிவிழாக் காணவுள்ள மதிப்பிற்கும் அன்புக்குமுரிய மல்லாவி S.S சண் என செல்லமாக அழைக்கப்படும் உயர் திரு. சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களின் சேவைகளையும் தியாகங்களையும் வெறும் எழுத்துக்களால் மட்டும் வரிந்துவிட முடியாது ஏனெனில் எமது துணுக்காய் பிரதேச வளர்ச்சியிலே அதிக அக்கறையோடு செயற் பட்ட இந்த மலர் நாயகன் பல தடவைகள் எமது கல்விளான் கிராமத்திற்கு மாற்றலாகி வந்து கிராம மற்றும் இந்து ஆலயங்கள் வளர்ச்சியிலே அதி தீவிரமாகச் செயற்பட்டு வெற்றி கண்டவர் குறிப்பாக சென்ற 30.08.2004 அன்று நடைபெற்ற கல்விளான் அரசடி விநாயகர் ஆலய 2வது புனருத்தாரண மகா கும்பாபிஷேகத்தின் போது பரிபாலன சபையின் போசகராக இருந்து எம்மோடு இணைந்து இரவு, பகல் பாராது பாடுபட்டு பாலஸ்தாபனம் செய்த 07 மாதங்களில் மகா கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற வழிசெய்தவர். ஆலய புனரமைப்பின் போது கட்டடக் கலைஞர்கள் சிற்ப வேலை மற்றும் வர்ணவேலைக் கலைஞர்களில் மிகவும் பொருத்தமானவர்களைத் தேர்ந் தெடுத்து மிகவும் அழகான ஆலய அமைப்பை உருவாக்க வழிசெய்தவர். திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பல வேலைகளைத் தனித்தனி உபயமாக ஒவ்வொரு அடியார்களிடம் ஒப்படைத்து வேலைகளையும் பணத் தேவைகளையும் இலகுவாக்கியதோடு ஏனைய செலவுகளுக்கும் அவ்வப் போது பொதுக் கூட்டங்களை ஒழுங்குபடுத்தி பொதுச்சபையோடு ஆலோசித்து திட்டமிட்டு நிதிகளை சேகரித்து குறைந்த காலத்திற்குள் சகல திருப்பணி வேலைகளும் செம்மையாகப் பூர்த்தி செய்யப்பட்டு குறித்த தினத்திலே எம்பெருமானுடைய மகாகும்பாபிஷேகம் மிக மிகச் சிறப்பாக நடைபெற உழைத்தமை மட்டுமல்லாது துணுக்காய்ப் பிரதேச கிராம சேவையாளர் சேவைகளையும் செய்து கொண்டு கடமை தொடங்க முன்பும் முடிந்த பின்பும் தனது இல்லத்திற்கு செல்வதைக் குறைத்து ஆலயத்திலேயே நின்று அனைவரையும் உற்சாகப்படுத்துவதோடு தானும் சுறுசுறுப்பாக திருத் தொண்டுகள் செய்து எமது ஆலய விழாக்கள் யாவும் பெருவிழாவாக அமைய உழைத்தவர்.

ஆலய விழாவின்போது ஆங்காங்கே விளையாடிக் கொண்டிருந்த சைவச் சிறார்களை மண்டபம் முன் அமரச் செய்து அவர்களையும் பஜனை மற்றும் கூட்டுப்பிரார்த்தனைகளில் ஈடுபடுத்தி அவர்களையும் இறைபணியில் ஆர்வம் கொள்ள வைத்த சாமர்த்தியன். சென்ற ஆண்டு எமது ஆலய மகோற்சவ காலத்தில் ஏனைய ஆலயங்களில் திருவிழா நடைபெற்றமையால் சண்முகநாதன் ஐயா அவர்களை பஜனைக்கு ஒழுங்கு படுத்த முடியாமல் போய் விட்டது. இருந்தும் எமது வேண்டுதலாலும் விநாயகப்பெருமானில் கொண்ட அதீத பக்திப்பிணைப்பினாலும் ஒரே ஒரு நாள் தனது குழுவினருடன் வந்து எமது அறநெறிப் பாடசாலை மாணவர்களையும் இணைத்து தாம் கொண்டு வந்த தாளக்கருவிகளைக் கொடுத்து மிகவும் பக்திப் பரவசமான ஒரு பஜனை நிகழ்வினை நடத்திச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிலிருந்து எமது மாணவர்கள் தாளங்கள் இல்லாவிட்டாலும் தமது கைகளால் தாளம் போட்டுத் தினமும் பஜனையில் ஈடுபட ஆரம்பித்து விட்டார்கள். அது மிகவும் அற்புதமானது சிறார்களுக்குச் சமய விழிப்புணர்வதைத் தூண்டுவதற்கான உத்தியாக அமைந்ததோடு எதுவித எதிர்ப்பார்ப்புகளும் இல்லாமல் தனது சொந்த செலவிலேயே வந்து நிகழ்ச்சியை நடத்திச் சென்றார். தொகுக்கப்பட்ட திருமுறைகளை அதற்காண பண், இசை, தாள லயத்தோடு பாடி ஏனையோரையும் பாட வைக்கும் பெருமை கொண்ட கல்வி, செல்வம், வீரம் மூன்றும் பொருந்திய சிவத்திரு சிற்றம்பலம் சண்முகநாதன் ஐயா அவர்களின் சிவ தொண்டுகளின் ஒரு பகுதியையாவது எமது தலைமுறைக்குத் தெரியப்படுத்த உதவிய இந்நன்நூலை ஆக்க வழிசமைத்த மணிவிழாக்குழுவினருக்கு கல்விளான் அரசடி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு இவர்தன் வாழ்நாளில் தன்னைப் போன்ற இன்னும் பல்லாயிரக் கணக்கான சிவனடியார்களை உருவாக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு இன்னும் பல்லாண்டு காலம் ஆரோக்கியத்தோடு வாழ்ந்து எமது சைவ சமய விழுமியங்களும் ஆரோக்கியமாக இருக்கவேண்டுமென எல்லாம் வல்ல கல்விளான் அரசடி விநாயகப் பெருமானை வேண்டிக் கொள்கின்றேன். 1983ம் ஆண்டிலிருந்து முப்பத்தைந்து வருடங்களாக விசேட சேவை உத்தியோகத்தராகவும் கிராம சேவை உத்தியோகத்தராகவும் நிர்வாக கிராம அலுவலராகவும் மிகவும் கண்ணியமாகவும் கடமையுணர்வுடனும் கடமையாற்றி தனது பிள்ளைகளையும் மனிதனுக்கு மிகவும் அத்தியாவசியமான மருத்துவ சேவை மற்றும் தொழிநுட்ப சேவைகளை புரிவதற்குச் கற்பித்து ஒழுங்குபடுத்தி 03.01.2019ம் திகதியன்று அரச சேவையில் இருந்து இளைப்பாறி இனிவரும் காலங்களில் சமய மற்றும் பொது தொண்டுகளில் மேன்மேலும் ஈடுபடவுள்ள மதிப்பிற்குரிய மலர் நாயகன் சிவனருட்செல்வன் சிற்றம்பலம் சண்முகநாதன் ஐயா அவர்களை வாழ்த்தி அவருடைய பணி தொடர வாழ்த்தும்

கு. கேதீஸ்வரன்
உப தலைவர்
கல்விளான் அரசடி விநாயகர் ஆலய
பரிபாலன சபை
துணுக்காய் பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர்
சமாதான நீதவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்முகம் காட்டும் இனிய சண்முகநாதன் ஐயா.

பிறக்கின்ற இந்த புதிய வருடத்தின் தொடக்கத்திலேயே எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமாக விளங்கும் பெருந்தகையான கிராம உத்தியோகத்தர் திருவாளர் சி. சண்முகநாதன் ஐயாவின் மணி விழாவுக்கு வாழ்த்து வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

மனிதர்களாகப் பல பேர்கள் வாழ்ந்தாலும் மனிதத்தினுள் மனிதர்களாய் சில பேர்கள் மாத்திரமே வாழ்ந்து காட்டி இருக்கின்றார்கள். அதனில் சண்முகநாதன் ஐயா அவர்களும் ஒருவரே. அந்தவகையில் இவரது சேவை மக்கள் மத்தியில் நிறைவுடையதாகவே காணப்படுகின்றது. சேவை என்பது எல்லோராலும் போற்றப்படத்தக்கது. ஆனால் அதைச் செய்து முடிப்பவர்கள் ஒரு சிலரே. அதனுள் தான் எங்கள் சண்முகநாதன் ஐயா அடங்கி நிற்கின்றார் என்பதை பெருமிதமாகக் கூறுகின்றேன். அந்த வகையில்

"அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராகக் கொளல்"

என்னும் வள்ளுவரின் கூற்றுக்கிணங்க நாம் இவரைப் பெற்றுள்ளோம் துணுக்காய் பிரதேச மக்கள் ஒருவர்தானும் இவரது சேவையைப் பெறாதவர்கள் இல்லை என்பது உண்மை. தியாகச் சேவை நிறைந்த எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரித்தான பெருந்தகையை பல்லாண்டு பலனோடு நோயற்று வாழ வாழ்த்துகின்றேன். இவர் செய்யும் ஆன்மிக சேவை எமக்கும் எம் பிரதேசத்துக்கும் கிடைத்துக் கொண்டே இருக்க வேண்டுகின்றேன்.

திரு வெ. விஜயகுமார் (வினோத்)
தலைவர்
வர்த்தக சங்கம்
மல்லாவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனுக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்கள்...

**"நல்லதோர் வீணை செய்து அதை நலன்கெட புழுதியில் எறிவதுண்டோ."**

என்பது போல் நன்மைசெய்தோரை நயன்பட வாழ்த்தி நன்றி சொல்லியே ஆகவேண்டும். "அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அது ஈனும் நண்பெனும் நாடாச் சிறப்பு" எனும் வள்ளுவ வாக்கிற்கிணங்க பிறரிடம் விருப்பம் உள்ளவராக வாழும் வாழ்க்கையானது, எல்லோரிடத்தும் நட்புக் கொள்ளும் தன்மையைத் தரும். அந்த நட்பானது வாழ்க்கையைச் சிறப்பித்துப் பெருமையைத் தரும்.

இதற்கு ஒப்பாக வாழ்ந்தவரே தான் திருவாளர். சி.சண்முகநாதன் அவர்கள். இவரைப் பொறுத்தவரையில் ஒரு மனிதன் தன் அன்புக்குரியவர்களுக்காக உதவுவதைத் தவிர வேறு என்ன பாக்கியம் கிடைக்கப்போகின்றது. இப்படி வாழ்ந்தவர்களில் இவரும் ஒருவர் என்றே கூறலாம். நல்ல நண்பனாகவும், நற்பண்பாளனாகவும், நற்குணசீலனாகவும் கடமையே கண்ணாக எண்ணுபவராகவும் வாழ்ந்தவர். யாருக்காவது ஏதோ ஒரு உதவியை எவ்வகையிலாவது செய்து கொடுக்க வேண்டும் என்று எண்ணும் மனநிலை கொண்டவர். யாருடனும் மனம் நோகும் வண்ணம் பேசாதப் பண்பைக் கொண்டவர். என்றும் புன்முறுவலுடன் இன்முகத்துடன், சேவைமனப்பாங்குடன் வாழும் இவரிற்கு மணிவிழா எடுப்பதில் இப் பிரதேசம் மகிழ்வடைகின்றது.

முல்லை மாவட்டத்தின் முத்ததாகத் திகழும் துணுக்காய்ப் பிரதேசத்திலுள்ள அணிஞ்சியன்குளம் கிராமத்தின் நாயகனான இவர் இக் கிராமத்திலேயே கல்வி கற்று இப்பிரதேசத்திலேயே கடமை புரிந்து மணிவிழாக் காண்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். அரச சேவையில் சேர்ந்து "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்றதற்கு அமைய சேவையாற்றியுள்ளார். பாரபட்சம் பாராது சேவையாற்றியுள்ளார். இப்பிரதேசத்தில் பல கிராமங்களில் தமது பணியை மேற் கொண்டு மக்களின் வாழ்த்தைப் பெற்றுள்ளார். இதன் பயனாக இளைப்பாறும் இக் காலத்தில் இறைபணியிலும் சிறந்து விழங்குவதால் உயர் நிலையில் இருக்கின்றார் என்பதால் அது அவரது சேவை மனம் தொண்டு செய்யும் மனம், நற்பண்பு நிலையினால் ஏற்பட்டதென்றே கூறலாம்.

" எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

இந்த பெருந்தகையின் மணிவிழாவானது எத்தனையோ உள்ளங்களின் சேவை மனப்பாங்கை உற்சாகப்படுத்தும், சேவை செய்யும் ஒவ்வொரு உள்ளங் களையும் சிந்தித்துச் செயற்பட வைக்கும், இந்த விழாவானது கல்மேல் எழுத்துப் போல் காணுமே.

ஒருவர் பிறந்திருக்கும் போதும், இறந்திருக்கும் போதும், யார் யார் எமைப் பார்க்க வருகிறார்கள் என்பது எமக்குத் தெரியாது. இருக்கும் போது அவரது கண் முன்னே நல்ல விடயங்களைச் செய்து துதிபாடும்போது தான் புரியும். "ஒருவரை ஏசும் போது தனிமையில் ஏசு""பாராட்டும் போது பலர் முன் பாராட்டு" என்பது ஆன் மீக வாக்கு. அந்த வகையிலே திரு. சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்கள் வையத்தில் வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல யோகாம்பிகை சமேத யோகபுர நாதரை வேண்டி வாழ்த்துகிறேன்.

திருமதி. ஜெ. விஜயலட்சுமி
விழாக்குழு இணைச்செயலாளரும்,
வர்த்தக சங்க உறுப்பினரும்
அணிஞ்சியன்குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி விழா காணும் மகாநாயகனை வாழ்த்துகிறோம்...!

எஸ்.எஸ் என்று மக்களால் அழைக்கப்படும் திருவாளர் எஸ்.எஸ் சண்முகநாதன் துணுக்காய், பாண்டியன்குளம் வாழ் மக்களால் இலகுவில் மறக்க முடியாதவர். பல்வேறு பரிமாண சேவைகளால் மதிப்போடு மரியாதை செலுத்தப்பட்டவர். இப்பிரதேசத்தில் அரச சேவை, பொதுச் சேவை, தொண்டு சேவை என்பவைகளில் அவர் காட்டிய அளப்பரிய ஈடுபாட்டினை, இதய சுத்தியோடு கறைபடியாத கரங்களால் அவர் செய்தவைகளை வர்ணிக்கவோஇ அல்லது விபரிக்கவோ வார்த்தைகளை நாம் தேடித்தான் பார்க்க வேண்டும்.

அதிக மக்கள் செறிவினைக் கொண்ட அணிஞ்சியன் குளத்தைச் சார்ந்த திரு. சி.சண்முகநாதன் இயல்பாகவே நற்குணங்களைக் கொண்டிருந்ததோடு நல்ல குடும்பத்தைப் பின்னணியாகக் கொண்டவர் என்பது மறக்க முடியாத உண்மை. விசேட சேவை உத்தியோகத்தராக அரச சேவையில் நுழைந்தவர். பின்னர் கிராம அலுவலராக, இறுதியில் கிராம அலுவலர்களுக்கான தலைமை அதிகாரியாகப் பணிபுரிந்துள்ளார். தனது சேவைக்காலத்தின் போது பல்வேறு கிராமங்களில் கிராம அலுவலராகக் கடமையாற்றி மக்களின் மகோன்னத மதிப்பைப் பெற்ற பெருமைசாலி. எங்கும் அப்பழுக்கற்ற சேவையை வழங்கியவர். இப்படிப்பட்ட சேவையாளரை நாம் காணமுடியாது.

சமூக மட்டத்திலே பல்வேறு அமைப்புக்களில் இன்றுவரை சேவையாற்றிக் கொண்டிருப்பவர். இன்று வரை எமது அணிஞ்சியன் குளம் சனசமூக நிலையத்தில் தலைவராக இருக்கின்றதோடு, 20 வருடங்களுக்கு மேலாக சனசமூக நிலையத்தை வளர்த்து வழிநடத்திக் கொண்டிருக்கின்றார்.நேரந் தவறாமை, பணிவு, இனிமையான பேச்சு, புன்சிரிப்பு போன்ற நற்குணங்களால் மக்களைக் கட்டிப்போட்டுள்ளதோடு சிறந்த நிர்வாக ஆளுமையையும் கொண்டிருப்பதால் அவர் எடுத்த எந்த விடயத்திலும் தோல்வியைக் கண்டதேயில்லை.

தனது குடும்பத்திற்காக நேரத்தை ஒதுக்காமல் இரவு பகலாகச் சேவையாற்றிய அயராத உழைப்பாளி. இனியாவது தனது குடும்பத்தாரோடு தனது நேரத்தை ஒதுக்கி தனது ஓய்வு காலத்தை மகிழ்ச்சியோடு கழித்து நீடூழி வாழ்க என மனமார வாழ்த்தி நிற்கின்றோம்.

சு.மனோகரராசா (பொருளாளர்)
விநாயகர் சன சமூக நிலையம்
அணிஞ்சியன் குளம். யோகபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதநேயம் மிக்க பணியாளர்...

எமது பிரதேசத்தில் தனது சேவையினைச் செவ்வனே ஆற்றிய கிராம சேவையாளரும் துணுக்காய் பிரதேச செயலக கிராம சேவையாளரின் நிர்வாக உத்தியோகத்தரும், சமாதான நீதவானுமாகிய திரு. சி. சண்முகநாதனின் மணிவிழா வாழ்த்து வரைவதில் பெருமைப்படுகின்றேன்.

வன்னிப் பெருநிலப்பரப்பின் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்தில் மல்லாவி அணிஞ்சியன்குளத்தில் தனது இருப்பிடத்தைக் கொண்ட கிராம சேவையாளர். அவர்கள் இப்பகுதியில் சேவை செய்யாத கிராமங்களே கிடையாது. அந்த வகையில் நான் கடமையாற்றும் மு/தேறாங்கண்டல் அ.த.க பாடசாலையும் குறித்த கிராமமும் இவர் சேவையைப் பெறத் தப்பவில்லை. தனது சேவைக் காலத்தைமுற்று முழுதாக துணுக்காய் பிரதேசத்திற்கே அர்ப்பணித்தார். இந்த வகையில் அவர் பதவி வகிக்காத ஆலய நிர்வாகங்களே இல்லை. அதை விட இணை பதவிகள் இவரைத் தேடிவரும்.இவர் நாடிச் செல்வதில்லை. இந்தவகையில் நான் பல நிர்வாகங்களில் இவருடன் சேர்ந்து இயங்கியுள்ளேன். இவர் நாவில் இருந்து முடியாது, இல்லை என்ற வார்த்தைகளை நான் கேட்பதில்லை. நிமிர்ந்த நடை, சுறுசுறுப்பான செயற்பாடு, உறுகிய பேச்சு, தலைமைத்துவத் தன்மை, செயற்றிறன் மிக்கவீரன். எந்த நிகழ்விலும் தவறாத பிரசன்னம், கொண்டவராகவும் திகழ்ந்தார். எமது கிராம மக்களுக்கான உன்னத சேவையில் அவர்களின் உள்ளங்களில் குடியிருந்த கோயில் மக்கள் சேவையில் கலங்கரை விளக்கம். மக்களின் மனதில் இதயக்கனி.

இதை விட பாடசாலை செயற்பாடுகளை எடுத்துக் கொண்டால்.எமது பாடசாலையை நான் 2014.03.16ம் திகதி பொறுப்பு எடுக்கும் போது என்னை இங்கு அழைத்துக் கொண்டு வந்து அறிமுகவிழா நிகழ்த்தினார். அவரின் வெள்ளை மனமும் முற்போக்கு சிந்தனையும் காரணமாக 4 வருட காலங்களில் எமது பாடசாலை அபார வளர்ச்சி கண்டு மிளிர்கின்றது. அந்த வகையில் எமது பாடசாலையின் எந்த அபிவிருத்தி முயற்சியிலும் அயராது பாடுபட்டவர். மாணவச் செல்வங்கள் உதவிகளிலும் முன்னின்று உழைத்தவர்.சண்முகநாதன் கிராம அலுவலர் இல்லாத எமது பாடசாலை நிகழ்வுகள் எதுவும் கிடையாது. அவர் எமது பாடசாலையின் சமூகத்தில் ஆற்றாத விழிப்புணர்வுகளே கிடையாது.அந்த வகையில், அறநெறிப்பாடசாலை, முதியோர்தின விழா, சிறுவர் தினம், கோயில் விழாக்கள், ஆலய வளர்ச்சி போன்றவற்றினூடாக பாடசாலைச் சூழலிலும் சமூகத்திலும் பெரும்பங்காற்றியுள்ளார். இந்த வகையில் மணிவிழாக் காணும் திரு. சி.சண்முகநாதன் அவர் மனம் போல் அவரது குடும்பத்துடன் சகல சௌபாக்கியமும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

திரு பு. கேதீஸ்வரன்
அதிபர்,
மு/தேறாங்கண்டல் அ.த.க. பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா நாயகனுக்கு மனப்பூர்வமான வாழ்த்துக்கள்...

வளம் கொழிக்கும் வன்னி மண்ணின் முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குப் பகுதியான முல்லையும் மருதமும் ஒழுங்கே அமையப் பெற்ற கிராமமான அணிஞ்சியன் குளம் கிராமத்தின் மூத்தகுடி சிற்றம்பலம் அவர்களின் கனிஷ்ட புதல்வர் திருவாளர் சண்முகநாதன் அவர்கள்.

இவர் தனது இளமைக் கல்வியை மு/ அணிஞ்சியன் குளம் தமிழ் வித்தியாலயத் திலும், உயர் கல்வியை மு ஃ யோகபுரம் மகா வித்தியாலயத்திலும் கற்றுத் தேர்ந்தார். இவரது கல்லூரிக் காலத்தில் கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கியதுடன். ஒழுக்கம் பண்பாடு, விழுமியங்கள் சார்ந்த துறைசார் இணை பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கியவர்.

01/07/1987 ஆம் ஆண்டு தொடக்கம் துணுக்காய் பிரதேசத்தினுடைய கிராம சேவையாளராக நியமனம் பெற்று அன்றிலிருந்து இன்றுவரை துணுக்காய்ப் பிரதேசத்திலுள்ள பெரும்பான்மையான கிராமசேவையாளர் பிரிவுகளிலும் இவரது கால் தடம் பதிந்துள்ளதே என்று கூறலாம். இவரது நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் எப்பொழுதும் புன்னைகை பூத்த முகமும் எல்லோர் மனங்களிலும் இடம் பிடித்துள்ளது என்றே கூற வேண்டும்.

இவரது பணியானது கால நேரம் பாராது மக்கள் சேவையே மகேசன் சேவை என எண்ணி உயர்வு, தாழ்வு பாராட்டாது செயற்பட்டவர். அத்துடன் நண்பர் சண்முகநாதன் அவர்கள் சுற்றறிக்கைகளுடாக வருகின்ற விடயங்களைக் கூட மக்களுக்குச் சாதகமாகப் பரிசீலனை செய்து உதவக் கூடிய ஒரு தற்துணிவுள்ள சேவையாளராகச் செயற்பட்டவர்.

வன்னியின் மீள்குடியேற்றத்தின் போது முதன் முதல் குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசம் துணுக்காய்ப் பிரதேசம் ஆகும். அந்தச் சந்தர்ப்பத்திலும் முதல் துணிந்து வந்து மக்களோடு மக்களாகத் தோள்கொடுத்து மக்களுக்கு சேவையாற்றிய மகான் என்றே கூறலாம். அதுமட்டுமல்லாமல் வந்தோரை வரவேற்று உணவளித்து உபசரிக்கும் வன்னி மண்ணின் பண்பிற்கமைய என்னையும் மீள் குடியேற்றத்தின் போது அவரது வீட்டில் தங்கவைத்து உபசரித்தவர். மீள்குடியேற் றத்தின் போது துணுக்காய் பிரதேசத்தில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட முதற் பாடசாலை மு/ யோகபுரம் மகாவித்தியாலயம். இப் பாடசாலை ஆரம்பிப்பதற்கும் எனக்கு பக்க பலமாக நின்று தோள் கொடுத்து உதவியவர். அந்த வகையில் கல் விப் பணிக்குப் பெரும் பங்காற்றியுள்ளார் என்றால் மிகையாகாது. அந்தவகையில் அவர் ஆற்றிய சேவையின் பயனாக "தக்கார் தகவிலார் என்பது அவர் அவர் எச் சத்திற் காணப்படும்" எனும் பொய்யா மொழிப் புலவரின் வாக்கிற்கமைய அவரது பிள்ளைகளும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குகின்றமையே அவரது சேவைக்குச் சான்றாகும். அந்த வகையில் இவரது அகவை அறுபதில் தமது கிராம சேவையாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்வது என்பது எமது பிரதேசம் ஒரு சிறந்த சேவையாளரை இழக்கின்றது என்றாலும் இவரது மணிவிழாவானது மக்கள் சிறப்பான முறையில் நடைபெற வேண்டும் என மக் கள் எண்ணியதிற்கமைவாக சிறப்பான முறையில் நடைபெறவேண்டுமென மனமார வாழ்த்துவதுடன் இவரது எதிர்காலம் ஒளிமயமாக அமைய குடும்பத்தினரோடு சிறப்பாக வாழ இறையாசி வேண்டி மென்மேலும் எமது பிரதேசத்திற்த்கு தேவையான பல்வேறு தேவைகள் உள்ளன என்பதனையும் அவற்றில் தங்களது பங்களிப்பினையும் சமூகம் எதிர்பார்த்து நிற்கின்றது என்பதையும் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

திரு. த. யோகானந்தராசா
அதிபர்
மு/மாங்குளம். ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபதாவது அகவையில் மணிவிழாக்காணும் கிராமசேவையாளர் சிற்றம்பலம் சண்முகநாதன் அவர்களின் மணிவிழா

நிறைவாக நேர் அறுபது ஆண்டுகள்
குறைவிலாப் பொதுச்சேவை செய்த
நற்குணச் செம்மலே வாழீர்
அறநெறி வாழ்வு தன்னை உரைத்து நின்று
அன்புடனே அனைவரையும் நேசித்து வாழ்பவர்
கடமை தன்னைக் கண்ணெனவே கருதி வாழ்பவர்
மடமை போக்க பொதுமக்களுக்காய் தம்மை ஈர்ந்தீர்
சீர்தமிழும் சைவமுமாய் தமிழர் பெருமைகளை பறைசாற்றும்
சீலம் நிறை பண்பாளனாய் வாழ்ந்து காட்டியவர்
மானிடத்தை நேசித்து மாண்பு பல பெற்றவர்
மல்லாவி மக்களின் மனதினிலே பொதிகை மலைத் தென்றலாய் வீசி நின்றவர்
இறையருளால் உமது வாழ்வு ஒளிர்ந்திட வாழ்த்துகின்றோம்.

மக்கள் சேவை மகேசன் சேவை என செய்த வள்ளலே
புரையோடிக் கிடந்த புண்பட்டவர்க்கு
விரைந்தோடிச் சென்று சேவை செய்த செம்மலே வாழீர்
அன்பின் இருப்பிடமே பண்பின் உறைவிடமே
பக்குவமாய்ச் சேவை செய்யும் பண்பாளரே வாழீர்
யுத்தகாலச் சூழலிலே மரண அவலங்களில்
மதி கெட்டு மக்கள் நெறிகெட்டு ஓடுகையில்
மண்ணிற் சாய்ந்த மாந்தர்க்காய்
அல்லும் பகலும் அருகிருந்து
ஈமைக்கிரியைகளைச் செய்து வைத்த செம்மலே வாழீர்
கிராமத்தின் அலுவலராய் கிராமத்தில் பணி செய்தீர்
துணுக்காய் வலயத்தில் துடுக்கான சேவகராய்
துன்புறு மனிதர் துயர்துடைத்தீர்
பண்புடனே போற்றிடுவோம் பரமபதம் போற்றி வாழ்த்திடுவோம்.
மனித வாழ்வின் மகிழ்ச்சிக்காய்
மல்லாவிப் பிரதேசத்தில் மகத்தான சேவை பல செய்து வந்தீர்
நிர்க்கதியாய் நின்றமக்களுக்காய் நிவாரணங்கள் பலகொடுத்தீர்
ஏழைமக்கள் வாழ்விற்காய் ஏற்ற பல பணிகள் செய்தீர்
ஐயங்கன்குளம் பகுதியிலே கிளையில்லாச் சேவை செய்தீர்
மல்லாவி மக்களின் மனம் நிறைந்த சண்முகத் தூயமணியாய்
மாபெரும் சேவைகள் பல செய்தீர் மாண்புடனே வாழீர் வாழீர்.

பணிக்கே முதன்மையளிக்கும் பண்பாளராய் மணிக்கணக்காய் சேவைசெய்தீர்
மகத்தான சேவகரே வாழீர்
சண்முகம் மனோன்மணி சற்சங்க சபைதனிலே தானிணைந்து, தலையாய தலைமைப்பணி
செய்து வந்தீர் வாழீர்
சமய சமூகப் பணிகளிலே பல்துறை ஆர்வலராய் பட்டங்கள் பல பெற்று
ஜனாதிபதி விருதுகளையும் தன்னகத்தே கொண்டு
ஜனநாயகம் காத்து வந்த சண்முகநாதனே வாழீர்

கவிமணி கிரிஜா சண்முகரத்தினம்.
கனடா வேதாந்த ஞான மன்றச் செயலாளர்,
இலங்கைக்கான வவுனியா மாவட்ட மகளிர் பிரிவுத் தலைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Kajamugan Printers,
Nallur.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org